JANAVINODINI.

ஜநவிநோதிநி.

இல. 7.] ஜுலைமீ 1882. [புஸ்த. XIII.

CONTENTS.

Egypt 145
Seringapatam as it is 147
The Anatomy of Ants........ 151
The Dangerous Island—An Italian Story, (cont.) 156
A Lecture on Water and its Effects, on Public Health, by Dr. M. C. Furnell, (cont.)... 161
The Child's Corner 167
News 170

அட்டவணை.

எகிப்துதேசம் 145
ஸ்ரீரங்கபட்டணத்தின் தற்காலஸ்திதி. 147
எறும்புகளின் அங்கபரீக்ஷை 151
அபாயத்துக்கு இடமான ஒரு தீவு (இத்தாலியாதேசத்துக் கதை.). 156
ஜலத்தினால் உண்டாகும் சௌக்கியத்தைப்பற்றிய உபந்நியாசம் (தொடர்ச்சி.) 161
சிறுவர்க்கான கதை 167
சமாசாரம் 170

MADRAS:
Published by the
MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,
AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

TO OUR READERS.

In commencing a new volume of *Janavinodini*, we bid all a hearty welcome to its pages, and wish to remind them that, while the seasons pass quickly by, here we are still at our post, unchanged at least in one thing—our desire to please and interest our readers as far as we can; and the knowledge that our readers think kindly of us and of our work performed under difficulties will give us fresh energy for the coming year. Every month we shall put in something in the pages of *Janavinodini* adapted for nearly all ages, as well as interesting stories fitted for home use.

This Magazine requires now as much support as it is possible to secure, and this may be given in three ways; (1) By annual subscriptions *paid in advance*, and special donations for providing suitable pictures to charm the young more than ever; (2) By making the Magazine more widely known with a view to give it a larger circulation both in Town and Country; and (3) By literary contributions suited to the pages of the Magazine.

We take this opportunity to thank the able writers who during the past year kindly contributed some useful papers to *Janavinodini*, and hope that we shall continue to receive more of such co-operation in the year which has begun.

CAIRO—கேரோ நகரம்.



BANKS OF THE NILE—நீலநதீதீரம்.

ஜநவிநோதிநி.

இல. 7.] ஜுலைமீ 1882. [புஸ்த. XIII.

எகிப்துதேசம்.

ஆப்பிரிக்கா கண்டத்து வடபாரிசத்திலுள்ள எகிப்துதேசமானது நிலவளமும் நீர்வளமும் பெற்று மிகச் செழித்த நாடென்றும், இப்பூமியின் கீழ்ப்பாதிக்கு ஒரு சிறந்த பெரும் பண்டசாலையென்றும் நெடுநாளாகக் கொண்டாடப்பட்டிருக்கின்றது. அந்நாட்டுக்கு உண்டான அவ்வளவு பெருமையும் அத்தேசத்தை ஊடுருவிப்பாயும் நீலநதியாலேயேயொழிய மற்றொன்றினாலுமல்ல. அந்நதி ஜீவநதியாய் எகிப்துதேசத்தில் மழை ஏறக்கட்டியகாலத்திலும் பெருக்குடையதாகி ஆற்றின் இருகரையிலுமுள்ள நாடுகளில் பாய்ந்து மிக்கவளப்பமுண்டாக்குகின்றது. அவ்வாறு இருகரையும் ஒன்ருய்ப் பூரணப்பிரவாகம் வரும்போது பார்ப்பவர்களுக்கு அது உள்நாட்டுக் கடல்போலவே தோன்றும். அக்காலங்களில் படவுகளின்வழியாயன்றி மற்றப்படி அவ்வாற்றிலே போக்குவரவு செய்வது கூடாது.

அலெக்சாந்திரியா நகரமானது எகிப்துதேசத்தின் ஒரு பகுதிக்கு ராஜதானியாயும் முக்கியமான வர்த்தகநகரமாயும் இருப்பதுமன்றி, இப்போது ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்குமுள்ள தரைவழியில் ஒரு மத்தியநகரமாகி அதன் பெருமைகளைப் பெற்று வருகின்றதாயினும், மிகக் கேடுகெட்டதாய்ச் சீர்திருத்தமில்லாத நகரமாயிருக்கின்றது. அந்நகரத்துக் குடிகளெல்லாம் மிக்க வறுமையால் வருந்துகிறவர்கள். முன் மகாஅலெக்சாந்தர் என்பவன் கட்டுவித்த அலெக்சாந்திரியா நகரம் 640-ஆம் ஆண்டில் காலிப் அமூர் என்பவனால் அங்கிருந்த உலகப்பிரசித்தமான ஒரு பெரிய புஸ்தகசாலையோடு எரித்துச் சாம்பலாக்கப்பட்டது. இப்போதிருக்கும் நகரம் அவ்விடத்துக்குச் சமீபத்தில் சிறந்த ஒரு கப்பல் ரக்ஷணஸ்தானத்தோடு பின்பு புதிதாய்க் கட்டப்பட்டதாம்.

அந்நகரத்திலிருந்து பதின்காததூரத்துக்கு அப்பால் நீலநதிக்கரையிலே அத்தேசத்து ராஜதானியான கேரோபட்டணம் இருக்கின்றது.

அலெக்சாந்திரியாவிலிருந்து கேரோவுக்குத் தரைவழியாய்ப் போக இருப்புப்பாதையும் உண்டு; கப்பலேறிப்போக வாய்க்கால்வழியும் உண்டு. அப்பட்டணத்தில் தெருக்களெல்லாம் மிகவும் நெருக்கமானவைகள். அப்பட்டணத்துக் கோட்டைமுதலிய பல பெருங் கட்டடங்களின் காட்சியும் அதற்குச் சிறிதுதூரம் அப்பாலுள்ள புராதனமான கோபுரங்களின் காட்சியுமே மிக வியக்கத்தக்கவை. அந்தக் கோபுரங்களெல்லாம் பூர்வகாலத்து அரசர்களின் கோரிகள் என்கிறார்கள்.

எகிப்துதேசமானது ஆதியில் பற்பல அரசர்களால் ஆளப்பட்டுக் கடைசியில் 1517-ஆம் ஆண்டிலே துருக்கி சுல்த்தானுக்குச் சுவாதீனமாகி நாளதுவரை அவர்க்கே கப்பம்கட்டி வருகின்றது. ஆயினும் மகமெத் ஆலி என்பவனுடைய வம்சத்தாரே அத்தேசத்தைக் குலக்கிரமமாய் சுல்தானுக்குப் பதிலாக இன்றுவரையில் ஆண்டுவருகின்றனர். அப்படி துருக்கிசுல்தானுக்குப் பிரதிநிதியாய் ஆள்பவருக்கு கிடைவ் என்னும் பட்டப்பெயர் அளிக்கப்பட்டிருக்கின்றது.

இப்படியிருக்கச் சென்ற ஏழெட்டு மாதங்களுக்கு முன்னே அத்தேசத்தில் ஏதோ சில உள்நாட்டுக் கலகங்கள் உண்டாக, அதனால் அவ்விடத்துச் சேனைத்தலைவர்களுள் ஒருவனான அரபிபாச்சா என்பவன் ஐரோப்பியர்க்கு விரோதமாய்க் குடிகளைத் தூண்டிவிட்டு சுல்த்தானுடைய பிரதிநிதியான கிடைவ் என்பவனையும் நிர்ப்பந்தப்படுத்திப் பல பொல்லாங்குகள் செய்யப் புகுந்தனன். இப்படி அத்தேசத்தார் கலகப்படுவது கண்டு அங்கிலேயரும் பிராஞ்சுக்காரரும் தமக்கு அத்தேசத்திலுள்ள வர்த்தகவியாபாரங்களுக்கும், இந்தியாவுக்கு வரும்வழியாய் அத்தேசத்துக் கீழண்டைக் கரையோரத்திலுள்ள சூயஸ்கால்வாய்க்கும் இத்தருணத்தில் ஏதாவது அபாயம் நேரிடப்போகிறதென்று பலவிடங்களிலுமிருந்து சேனைகளை அழைப்பித்துச் சித்தமாய் வைத்துக்கொண்டு வருகிறார்கள். நீங்கள் இத்தனை நாளைக்குள் ஒழுங்காய்ப் போவதற்குத் தகுந்த ஏற்பாடு ஒன்றும் தெரிவிக்காமற்போவீர்களானால் உடனே அலெக்சாந்திரியா கோட்டையை இடித்து நாசமாக்கிவிடுவோம் என்று சிலநாளைக்குமுன் அங்கிலேயர் கண்டிப்பாய்க் கேட்டதற்கு, அத்தேசத்தார் எவ்விதமான சமாதானக் குறிப்பும் காண்பிக்காமற்போகவே நாளதுமாதத்தில் அங்கிலேயக் கப்பல்தலைவரான அட்மிரல் ஸீமோர் என்பவர் கப்பலிலிருந்து பீரங்கிவெடிதீர்த்து அக்கோட்டையை இடித்துவிட்டார். அங்கிருந்த ஐரோப்பியர்களுள் சிலர் மெல்லத் தப்பித்துக்கொண்டு ஓடிப்போய்விட்டார்கள். அத்தேசத்தார் 2000 பேர் கொல்லப்பட்டார்கள். அதற்குப் பிரதியாய் அரபிபாச்சா அங்கிருந்த தன் சேனைகளையெல்லாம் அப்புறப்படுத்திக்கொண்டு அங்கே காவல்செய்யப்பட்டிருந்த குற்றவாளிகளை விடுதலைசெய்துவிட்டு அப்பட்டணத்

தைக் கொளுத்திவிட்டான். கிடைவ் மெல்லத் தப்பித்துக்கொண்டு அந்தத் துறைமுகத்திலேயே அங்கிலேயக் கப்பலில் அடைக்கலம் புகுந்து ராஸல்தீன் அரண்மனையிலே போய்ச்சேர்ந்து 700 கப்பல் போர்வீரர்களால் ரக்ஷிக்கப்பட்டு வருகிறார். எகிப்துதேசத்துச் சேனைகளின் சகாயமும் அவர்க்குச் சிறிது கிடைத்திருக்கின்றது. சூயஸ்கால்வாய் முழுதும் பீரங்கிப்படவுகள் காத்துக்கொண்டிருக்கின்றன.

ஐரோப்பாவிலுள்ள ராஜாங்கத்தார் அனைவரும் எகிப்துதேசத்திலுண்டாகிய இக்கலகவிஷயத்தில் கவலைகொண்டிருக்கிறார்களாயினும் ஜர்மனிதேசத்தார் ஆஸ்திரியாதேசத்தார் இவ்விருவருமாத்திரம் அதில் பிரவேசிப்பதாகச் சொல்லவில்லை; ஆடவிட்டு வேடிக்கை பார்ப்பவர்போல் காண்கிறது. இப்போதிருக்கிற மும்மரத்தைப் பார்த்தால், நகத்தால் கிள்ளியெறிவதைக் குடாரிகொண்டு வெட்டுவது என்று சொல்லும் உலகவழக்கப்படியே, சிலமாதங்களுக்கு முன்னே எளிதில் அடக்கதக்கதாயிருந்த இக்கலகம் இப்போது ஒரு பெரும்போர் விளையாமல் அடங்காதெனத் தோன்றுகிறது.

ஸ்ரீரங்கபட்டணத்தின் தற்காலநிலைமை.

பெங்களூருக்கு அருகிலுள்ள அங்கிலேயப் படைநிலைக்கு எழுபத்தெட்டு மைல் தூரத்தில் காவிரியாற்றினால் நாற்புறமும் சூழப்பட்ட ஒரு தீவிலே முன்னொருகாலத்தில் மிகப் பெருமையும் பிரசித்தியும் பெற்றிருந்த ஸ்ரீரங்கபட்டணத்துக் கோட்டையானது நாளைக்கும் பல பிரயாணிகளுக்குப் புதுமையான காட்சியளிக்கின்றது. அக்கோட்டை மைசூர் நகரத்திலிருந்து கொஞ்சம் குறையக் காததூரத்திலுள்ளது. வெளிப்புறத்தினின்று அக்கோட்டையைக் காண்போர்க்கு அது, முன் 1799-ளு மேமீ 4௳ காலையில் அதை முற்றுகைபோட்டுக்கொண்டிருந்த ஜெனரல் ஹாரிஸ் என்னும் சேனாபதியினால் செலுத்தப்பட்ட சேனைகட்கு எவ்விதமாய்க் காணப்பட்டதோ, அவ்விதமே இன்னும் காணப்படுகின்றது. மிகப் பிரசித்தமான அந்நாளில் அந்தச் சேனை அக்கோட்டைக்குள் புகுந்த சிறுவழி இன்னும் அப்படியே அங்கிலேயருடைய பராக்கிரமத்திற்கு ஒரு ஜயஸ்தம்பமாய்ப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அக்கோட்டை மதிட்சுவர்களில் முன்போலப் பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கவில்லையென்ற குறையொன்றேயொழிய மற்றப்படி அது மாறுபாடின்றி முற்காலத்திருந்த நிலையிலே நிற்கின்றது. தனது வாலிபத்திலும் பருவகாலத்திலும் இத்தென்னிந்தியா முழுதும் அஞ்சி நடுங்கத்தக்க நிலையிலிருந்து, இப்போது அவ்வாண்மை அத்தனையும்

அடங்கி மேனுட்டுத் தீவிலிருந்துவந்து ஜயங்கொண்டவர்க்குத் தொண்டு பூண்டிருக்கும் அக்கோட்டையைப் பார்க்கையில், கண்ணும் கெட்டுக் கைப்படையும்போய்த் தவிக்கும் ஒரு கொடிய ராக்ஷதன்போலத் தோன்றுகின்றது.

இவ்வண்ணம் ஸ்ரீரங்கபட்டணத்துக் கோட்டையின் பெருமை இக்காலத்திலும் வியக்கத்தக்கதாயிருக்கின்றது. அது பற்பல புதிய மாறுபாடுகளையும் கண்டிருக்கின்றது. ஒருவகையில் நோக்குங்கால் அக்கோட்டையின் சரித்திரம் இவ்விந்துஸ்தானத்து வரலாறுகள் அனைத்தையும் ஒருவாறு விளக்கும். ஆதியில் அது இந்துக்களால் ஆளப்பட்டு, பிறகு மகம்மதியர்களாலும் மகாராஷ்டிரர்களாலும் அச்சமுறுத்தப்பட்டுச் சில்நாள் இத்தென்னிந்தியாவில் மகம்மதியருடைய முக்கிய ராஜதானியாயிருந்து கடைசியில் இம்மூவரையும் அடக்கிய மேலதிகாரிகட்கு அடிமையாயிற்று. இவர்களுள் ஒவ்வொருவருடைய அரசாட்சிகாலத்துச் சரித்திரமும் மாட்சிமையுடையதாகும். அவற்றுள் அங்கிலேயருடைய ஆட்சியின் சரித்திரம் முழுதும் மிகச் சிறப்புப்பெற்றிருக்கின்றது. ஸ்ரீரங்கபட்டணத்தையே ராஜதானியாகக்கொண்டு அந்நாட்டை ஆண்ட ஒரு வீரன் இச்சென்னைக் கோட்டைவாயிலில் வந்து அங்கிலேயருடன் சமாதானவுடம்படிக்கை பேசி இன்னும் ஒரு நூற்றாண்டு கூடக் கழியவில்லை. அது நடந்த இருபதுவருஷகாலத்திலேயே இவ்விந்துதேசத்து மிகச் சமர்த்தர்களான கவர்னர் ஜனரல்கள் அக்கோட்டையை முற்றும் கீழ்ப்படுத்தினாலல்லது அங்கிலேயர்க்கு இத்தேசத்தில் உயர்வுகிடைக்கமாட்டாதென நினைத்து அவ்வண்ணமே செய்து இத்தென்னிந்தியாவில் தமக்கு எதிரி எவரும் தோன்றுவண்ணம் செய்துகொண்டனர்.

இந்த ஸ்ரீரங்கபட்டணம் காவிரியாறு இரண்டு கிளையாகப் பிரிந்து சூழ்ந்துகொண்ட ஒரு தீவிலிருக்கின்றது. அது ஏறக்குறைய மூன்றரைமைல் நீளமும், மிகவும் அகன்ற இடமான மத்தியபாகத்தில் ஒன்றரைமைல் அகலமும் உடையது. அக்கோட்டை இரண்டாயிரம் சதுரகஜம் பரப்புள்ளது. காவிரியாறு அக்கோட்டையை மேற்கிலும் வடக்கிலும் மிக நெருங்கிச் சூழ்ந்துகொண்டு அதற்கு ஒரு உத்தமமான அகழ்போல விளங்குகின்றது. ஜூன்மாதம்துவக்கி நவம்பர்மாதம்வரையில் அவ்விடத்தில் அந்த நதியைக் காலால் நடந்தாயினும், படவுகொண்டாயினும், எவ்விதத்திலும் கடந்துபோவது கூடாது.

ஹைதர், திப்பு என்ற இரண்டு கொடும் புலிகளால் சிலகாலம் காக்கப்பட்டதனாலேயே ஸ்ரீரங்கபட்டணத்துக்கு அத்தனை சிறப்புண்டானது. முன்னே அவ்விடத்தில் ஒரு விஷ்ணு ஆலயமும் அதைச் சுற்றி ஒரு சிறு கிராமமுமேயிருந்தன. அவ்வாலயத்தைப்

பற்றியே அவ்விடத்துக்கு ஸ்ரீரங்கபட்டணமெனப் பெயர்வழங்கலாயிற்று.

ஸ்ரீரங்கபட்டணத்தைச் சுற்றிய இடமெல்லாம் நிலவளமுள்ளதாய்ச் செழித்த தேசமாகையாலேயே அது ராஜதானியாகக் கொள்ளப்பட்டதென்னலாம். இத்தென்னிந்தியாவிலுள்ள மற்ற நதிகளைப்போலல்லாமல் காவிரி எக்காலத்திலும் அவ்விடத்தில் வெள்ளம் ஓடுகின்ற நதியாகையால், அதை அடுத்த நாடுகளுக்கெல்லாம் வாய்க்கால்களின் வழியால் அவ்வாற்றுநீர் கொண்டுபோய்ப் பாய்ச்சப்படுகின்றது. சுற்றுப்புறம் எங்கும் ஒரு துளிகூட மழைபெய்யாமல் ஏறக்கட்டியகாலத்தும் ஸ்ரீரங்கபட்டணத்தைச் சுற்றிய இடமெல்லாம் பயிர்களும் கருப்பஞ்சோலைகளும் அடர்ந்து அனைவரும் கண்குளிரக் காணத்தக்கதாயிருக்கின்றது.

ஆயினும் ஸ்ரீரங்கபட்டணம் வாஸத்துக்கு ஆரோக்கியமான இடமன்று. ஒருவித நச்சுக்காற்றினால் சுரம்கண்டு அங்கு உயிர்ச்சேதம் அதிகமாய் உண்டாகின்றது. ஆனதுபற்றியே அங்கிருந்த அங்கிலேயருடைய காப்புச்சேனைகளெல்லாம் அப்புறப்படுத்தப்பட்டன. ஒரு பட்டாளம்மாத்திரம் அக்கோட்டைக்குக் காததூரத்தில் பிரஞ்சுராக்கு என்னும் ஒரு மேட்டுத்தாக்கிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. காவிரிஆற்றிலுள்ள பாறைகளின்மேல் சூரியகிரணம் உறைத்து அதன் உஷ்ணம் ஏறுவதனாலேயே அவ்விடம் அவ்வளவு ரோகபூமியாயிற்று என்கிறார்கள். அதனால் ஸ்ரீரங்கபட்டணத்தின் பெருமை அநேகமாய் இப்போது அழிந்துபோயிற்று. அந்த இடத்துக்கு இப்போது இருக்கும் பெருமையெல்லாம் அதை முதலிலே ஒரு ராஜ்யத்துக்குச் சிறந்த ராஜதானியாக்கிய மகம்மதியசூரர்கள் இருவருடைய கோரிகள் கட்டப்பட்டிருப்பதனாலேதான். அவர்களுள் ஹைதர் ஆலியைமாத்திரம் அந்நாட்டார் வெகுவாக மறந்துபோயினர்களாயினும், திப்புசுல்தான் நடத்திவந்த பல அக்கிரமங்களால் அவனை மாத்திரம் இன்னும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டேயிருக்கின்றனர். திப்பு மிகப் பிடிவாதமும் கொடுங்கோன்மையுமுடையவன்; அவனுடைய நடக்கையெல்லாம் பித்தனுடைய நடக்கைக்கு ஒப்பானவை. அவனை அடக்கம்செய்த இடத்தில் கட்டிய கோரியைப் பிரயாணிகள் பலர் போய்ப் பார்த்துவருகின்றனர். அந்தக் கோரியில், "அவன் தன் மதவிஷயத்திற்கொண்ட சத்தியத்திற்காகவே தன் உயிரை விடுத்தான்; விரோதி மதஸ்தர்களுடைய மனதில் அவன் எப்போதும் நிலைகொண்டிருப்பான்" என்னும் கருத்துள்ள மொழிகள் வரையப்பட்டிருக்கின்றன. அங்கிலேயர் தம்முடைய கைப்பொருளைச் செலவுசெய்து அதைப் பத்திரமாய்ப் பாதுகாத்து வருகின்றனர்.

ஸ்ரீரங்கபட்டணம் கோட்டைக்கு ஒருமைல்தூரத்தில் திப்புவினுடைய துரியதௌலத் என்னப்பட்ட விலாஸமண்டபம் ஒன்று

உண்டு. அது காவிரிக்கரையிலுள்ள ஒரு உத்தியானவனத்திலே கட்டப்பட்டிருக்கின்றது. அவ்வரண்மனை வெகு சிறப்பாகச் சிங்காரிக்கப்பட்டு மகம்மதிய சிற்பத்தின் கைதேர்ந்த திறமைபோல விளங்குகின்றது. அவ்வரண்மனை எப்புறமும் சித்திரங்களால் சிங்காரிக்கப்பட்டிருப்பதுமன்றி, கீழ்மாடியில் திப்புவினது யுத்தவீரத்தைக்காட்டும் பல சித்திரப்பதுமைகளும் அணிஅணியாய் எழுதப்பட்டிருக்கின்றன. ஒரு புறத்தில் அவனுடைய சேனைகள் பிரஞ்சுக்காரருடைய உதவியுடன் எல்லாம் மீசையுடையவைகளாய் யுத்தத்திற்குப்போகும் பாவனையாக வரையப்பட்டிருக்கின்றன. இங்கு அச்சேனை பீரங்கிப்பட்டாளத்துடன் இங்கிலீஷ்காரருடைய சேனையை எதிர்க்கின்றது. அங்கிலேயர் இங்கு மிகவும் அபஜயப்பட்ட பாவனையாய் எழுதப்பட்டிருக்கின்றனராயினும் சதுரமாய் வளைத்துக்கொண்டிருக்கின்றனர். அந்தச் சதுரத்தின் மத்தியில் அங்கிலேயப் படைத்தலைவரான கர்னல் பேயிலியின் வடிவம் மிகவும் தொந்தரைபண்ணப்பட்டு ஒரு பல்லாக்கிலே விரலை வாயில் வைத்துக்கொண்ட வண்ணமாய்ச் சித்திரித்திருக்கின்றது. கன்னமீசையினால் அவர் கர்னல் பேயிலி எனத் தெளிவாகின்றது. அங்கிலேயருக்கெல்லாம் கன்னமீசையுண்டு. திப்புவோ ஜயசீலனாய் சாந்தமான வடிவத்துடன் கையில் ஒரு ரோஜாபுஷ்பத்தை வைத்துக்கொண்டபடி சித்திரிக்கப்பட்டிருக்கிறான். ஒருபுறத்தில் முற்காலத்தும் இக்காலத்துமுள்ள மகம்மதியவீரர்களின் படங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவ்விடம் முழுதும் இப்போது வெகு நன்றாய்ச் செப்பனிடப்பட்டிருக்கின்றது. அந்தச் சித்திரவர்ணங்களின்மேல் சூரியகாந்தி படும்போது அவை வெகு அலங்காரமாகக் காணப்படுகின்றன. அந்த அலங்காரங்களெல்லாம் தோற்றத்தில் கொஞ்சம் குரூரமானவைகளாயிருந்தாலும் மிகச் சிறந்தவைகளாயும் அநுரூபமானவைகளாயும் இருக்கின்றன.

அந்தப் பிரதேசமும் ரோகத்துக்கு இடமாய் வாஸயோக்கியமானதல்ல. அங்கும் காவிரியாற்றிலுள்ள கற்களே நச்சுவாயுவை உண்டாக்குகின்றன என்கிறார்கள். காவிரிநீர் பாய்கின்ற செழிப்பான நெல்வயல்களே காய்ச்சல் உண்டாக்குகின்றனவென நான் எண்ணுகிறேன். டியூக் அவ் வெல்லிங்தன் கம்மிஷனராயிருந்தபோது வாஸம்பண்ணின இடம் அதுதான்.

அன்று பகற்பொழுதுக்குமேல் நான் ஸ்ரீரங்கபட்டணத்தை விட்டு மைசூர்நகரத்துக்குப் போனேன். அந்நகரத்துக்கு அருகில் அந்தத் தரைமட்டத்துக்குமேல் 1000 அடி உயரமான சாமுண்டியென்னும் ஒரு குன்றும் அந்தக் குன்றின்மேல் ஒரு காளிகோவிலும் இருக்கக்கண்டேன். அந்தக் காளி அவ்விடத்தில் மஹிஷாசுரனென்னும் எருமைக்கடாவடிவமான ஒரு அசுரனைக் கொன்றதாகவும், அதைப்பற்றி வந்த மஹிஷாசுரபுரமென்னும் பெயரே மைசூரென

மருவி வழங்குவதாகவும் சொல்லுகின்றனர். அந்தக் காளியே அநாதியாய் மைசூர் ராஜவம்சத்தார்க்குக் குலதெய்வமாம்.

மகாராஜா சியாமராஜேந்திரவுடையார் பகதூர் இப்போது அத் தேசத்தை ஆண்டுவருகிறார். இவ்விளவரசர்க்கு அவருடைய முன்னோர் ஆண்டுவந்த அரசாட்சியை அங்கிலேய துரைத்தனத்தார் இப்போது அவ்வண்ணமே ஒப்புவித்தது இந்துதேச சரித்திரத்தில் ஒரு முக்கியமான செய்தியாம். மேலும் அங்கிலேய துரைத்தனத்தார் சுதேசராஜாக்களிடத்திலும் பிரஜைகளிடத்திலும் தருமபுத்தியும் உதாரகுணமும் உடையவர்களாயிருக்கின்றனர் என்பதற்கு இதுவே அனுபவசித்தமான ஒரு அத்தாட்சியாகும்.

எறும்புகளின் அங்கபரீக்ஷை.

இப்பிரபஞ்சத்தில் கடவுளால் படைக்கப்பட்டுள்ள பல பிராணிகளுள்ளும் உருவத்தில் சிறியவைகளான எளியஜந்துக்களே நாம் கண்டு மிகவும் வியக்கத்தக்க இயற்கையுடையவைகளாய் இருக்கின்றன. இதற்கு உதாரணமாய் எடுத்துக்காட்டுவதற்கு ஏற்ற பிராணி எறும்பைப்பார்க்கிலும் மிகச் சிறந்தது வேறில்லை. உருவமைப்பிலாயினும், விவேகத்திலாயினும், செய்கைகளிலாயினும் எவ்விஷயத்திலும் எறும்புகளே உயர்ந்தவைகளாய் இருக்கின்றன: எறும்புகள் செய்யவேண்டிய வியாபாரங்களுக்கு ஏற்றவண்ணமாய் அவைகட்கு வியக்கத்தக்கவிதமாக உருவம் அமைக்கப்பட்டிருக்கின்றது; விவேகவிஷயத்திலோ, பிராணிவர்க்கத்தில் தம்மைப்பார்க்கிலும் மிகவும் உயர்ந்த ஜாதியிற்சேர்ந்த பற்பல ஜந்துக்களையும் அவை அதிசயித்திருக்கின்றன; சில செய்கைகளில் அவை மனிதர்க்கே இரண்டாவதாயிருக்கின்றன. எறும்புகளைப்பற்றிய பற்பல விஷயங்களையும் நாம் கண்டறியத்தக்க தருணம் நமக்கு வாய்ப்பது அசாத்தியமேயாயினும், அவை எல்லாத்தேசங்களிலும் எல்லாவிடங்களிலும் சாதாரணமாக வசிக்கின்றவையாதலால், வெகுவாய் அனைவரும் நேராகவே அவற்றின் நடைபாவனைகளைப் பரிசோதனைசெய்து அநேகமாய் அவற்றின் பெருமைகளைத் தெரிந்துகொள்ளலாம். அப்படியும் தெரிந்துகொள்ளக்கூடாத விஷயங்களில் பிறர் பார்த்துப் பரிசோதனைசெய்து சொன்னவைகளையே நம்பவேண்டும்.

எறும்புகள் சாதாரணமாய்ப் பாறைகளில் கீழ்ப்புறத்திலும், மேட்டுத்தாக்கான தரைகளிலும், பட்டுப்போனமரங்களிலும், இன்னும் இதரமான மரம் செடிகளிலும் புற்றுவைத்து வாசம்பண்ணுவது வழக்கம். அப்படிப்பட்ட விடங்களிற்போய்ப் பார்த்தால் அவற்றின் சொரூபத்தை நாம் செம்மையாய்க் கண்டுகொள்ளக்கூடும்.

எறும்புகளுள் சில சட்டையுள்ளவைகளாயும் சில சட்டையில்லாதவைகளாயும் இருக்கின்றன. அவைகளுக்கு ஆறுகால்களும் இரண்டு தும்பிகளும் உண்டு. பூதக்கண்ணுடியைக்கொண்டு பார்த்தால் அவற்றின் உருவமைப்பு நமக்கு வெகு நன்ருய் விளங்கும். மற்றப் பூச்சிகளுக்கு இருப்பதுபோலவே எறும்புகளுக்கும் உடலானது, தலை, மார்பு, அடிவயிறு என மூன்று முக்கியமான பிரிவு உள்ளதாய் இருக்கின்றது.

எறும்புகளின் தலை ஏறக்குறைய முக்கோணவடிவமாய்ப் பின்புறத்தில் அகன்றும் கீழ்ப்புறத்தில் தட்டையாயும் இருக்கின்றது. முன்புறத்தில் கொஞ்சம் கீழ்ப்புறமாய் வாய் அமைந்திருக்கின்றது. வாயின் இருபுறத்திலும் பற்களோடுகூடிய கட்டையான மேலலகுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிலவற்றிற்கு அவ்வலகு நுட்பமாயிருப்பதுமுண்டு. அந்த மேலலகுகளுக்கு மத்தியிலே மேல் உதடு நின்று கொஞ்சம் கீழ்முகமாய்ச் சாய்ந்து வாயை மறைத்துக்கொண்டிருப்பதுமன்றியில், ஒரு கீலினுல் புணைக்கப்பட்டு வாயைத் திறப்பதற்கும் மூடுவதற்கும் அனுகூலமாயிருக்கின்றது. கீழ் அலகுகள் ஏறக்குறைய முழுதும் மேல்உதட்டினுல் மறைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அலகுகள் சிறியவைகளாயும் தோலினுலேயே உருவமைந்தவையாயும் மூன்று துண்டுகள்சேர்ந்து உண்டானவையாயும் இருக்கின்றன. அவ்விடத்திலேதான் உருசியறியும் கருவியான நாக்கு இருப்பதாகத் தோன்றுகிறது. வாயின் கீழ்ப்புறத்திலே கீழுதடு அமைந்திருக்கின்றது. நாக்கின் கீழ்ப்புறத்தில் அதன் நுனிக்கருகே கெட்டியாய்த் தட்டுப்போன்ற இரண்டு உறுப்புகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு உறுதியான மயிர் பொருத்தப்பட்டிருக்கின்றது. நாக்கின்கீழ் நீண்டு உறுதியான பற்களின் வரிசை ஒன்று உண்டு. வாயைச் சேர்ந்த இவ்வுறுப்புகளெல்லாம் உருவிற் சிறுத்தவைகளாகி வெகுவாய் மறைந்தேயிருக்கின்றன.

தலையின் முன்புறத்திற்கருகாமையில் இரண்டு தும்பிகள் எறும்புகளுக்கு உண்டு. அவை எறும்பின் உடலுக்கு ஏற்ற பரிமாணத்தோடில்லாமல் அதிகமாக நீண்டிருக்கின்றன.

எறும்புகளுக்குத் தலையின் பக்கங்களில் தும்பிகளுக்குப்பின்னுல் தொடர்கண்கள் கொஞ்சம் குவிந்த வட்டவடிவமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கண்களே இல்லாமலும் சில ஜாதி எறும்புகள் உண்டு. தனிக்கண்களுள்ள எறும்புகள் விசேஷமாயில்லை. சிலவற்றிற்கு மூன்று கண்களுண்டு. ஒரே கண்ணுள்ள எறும்புகளும் சில உள. அவ்வொரு கண் தலையின்மேல் அமைக்கப்பட்டிருக்கும்.

தலைக்குப்பின் மார்பானது மெல்லிய கழுத்தினுல் தலையோடு கூடப்பட்டு, முன்மார்பு, பின்மார்பு, நடுமார்பு என மூன்று பிரிவுள்ள

தாயிருக்கின்றது. இப்படி மூன்று பிரிவுடையதாயிருந்தும் இம்மார்பு பலவகை எறும்புகளில் பலவிதமாயிருக்கின்றது. மார்பின் ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு கால்கள் உண்டு. ஒவ்வொரு காலும் சாதாரணமாய் எல்லாப் பூச்சிகளுக்கும் இருக்கின்றபடி ஐந்து கணுக்களுள்ளதாயிருக்கின்றது. அவற்றுள் முதல் துண்டு மிகப் பெரியது; நுனித்துண்டிலே இரண்டு நகங்கள் இருக்கின்றன. எறும்புகளுக்குள்ள மூன்று ஜதைக் கால்களுள் ஒவ்வொரு ஜதைக்கும் நீளத்திலே வித்தியாசமுண்டு. முன்னே இருக்கின்ற ஜதை மிகவும் குட்டையானது, கடைசியிலிருப்பது மிகவும் நீளமானது.

அடிவயிறு ஆணெறும்புகளுக்கு ஏழு பிரிவாயும் மற்றவைகளுக்கு ஆறு பிரிவாயும் இருக்கின்றன. சில எறும்புகளுக்கு அவற்றுள் முதற்பிரிவும், வேறு சிலவற்றிற்கு முதலிரண்டு பிரிவுகளும் ஒரு தன்மையான அமைப்புடையவையாய்த் தனியே பிரிந்து தோன்றும் இடுப்புப்போல் இருக்கின்றன.

இவ்வெறும்புகள் மேற்பார்வைக்கு ஒரேதன்மையனவாய்த் தோன்றினும் உற்றுப்பார்க்குமிடத்து அவற்றுள் பல வேற்றுமைகள் உண்டு. எறும்புகளுள் சாதாரணமாய்க் கட்டெறும்பெனவும் சிற்றெறும்பெனவும் இரண்டுவகை உண்டு. கட்டெறும்புகளுள் சில சட்டையுள்ளவைகளாயிருக்கின்றன. சட்டையுள்ள எறும்புகளுள் சிறுத்திருப்பவை ஆணெறும்புகளெனவும் பெருத்திருப்பவை பெண்ணெறும்புகளெனவும் தெரியவருகின்றது. இன்னும் அதிக நுட்பமாய்ப் பரிசோதனைசெய்கையில் சட்டையில்லாத எறும்புகளெல்லாம் பெண்ணெறும்புகளெனத் தெளிவாகின்றது.

எறும்புகள் ஆண் பெண் அலி யென மூன்றுவிதம். அலியான எறும்புகளெல்லாம் வேலைக்காரரென்னப்படும். ஆண் பெண் எறும்புகளுக்குத் தலை முன்புறத்தில் குறுகலாயிருக்கும். வேலைசெய்யும் எறும்புகளுக்கோ அகன்றிருக்கும். ஆண் பெண் எறும்புகளுக்குச் சாதாரணமாய்க் கண்களுண்டு; மற்றவைகளுக்கோ இல்லை. பெட்டையெறும்புகளுடைய கண்களைப்பார்க்கிலும் ஆணெறும்புகளுடைய கண்கள் மிகத் தெளிவாய்த் தோன்றும்; பெண்ணெறும்புகளுக்கு ஆண்களைப்பார்க்கிலும் மேலலகுகள் மிகத் தெளிவாயிருக்கும். எறும்புகளுக்கு மார்பு ஒரேதன்மையதாயிராமல் ஒவ்வொரு ஜாதிக்கு ஒவ்வொருவிதமாயிருக்கும்.

எறும்புகளுக்கு இறகுகள் நான்கு உண்டு. அவற்றுள் முன்னிருக்கின்ற ஒரு ஜதை மிகவும் நீளமாகி, நடுமார்பின் பக்கங்களினின்றும் முளைத்திருக்கின்றது. மற்றொரு ஜதை பின்மார்புடன் சேர்ந்திருக்கின்றது. இவ்விரண்டு ஜதைச் சட்டைகளும் பெண்ணெறும்புகளைப்பார்க்கிலும் ஆணெறும்புகளுக்கு அதிக உறுதியாயிருக்கின்றன.

அடிவயிற்றிலும் சிலவிஷயங்களில் ஒன்றுக்கொன்று வேற்றுமை

உண்டு. பெண்ணெறும்புகளுக்கும் வேலைசெய்யும் எறும்புகளுக்கும் இருப்பதைப்பார்க்கிலும் ஆணெறும்புகளுக்கு அடிவயிற்றில் ஒரு பங்கு அதிகமுண்டு. எந்த ஜாதியெறும்புகளுள் வேலைசெய்யும் எறும்புகளுக்குக் கொடுக்குண்டோ, அந்த ஜாதியில் ஆண் எறும்புகளுக்குக் கொடுக்குக் கிடையாது; பெட்டைகளுக்குமாத்திரமுண்டு. அடிவயிற்றின் நுனியும் பெண்ணெறும்புகளுக்கு ஒருவிதமாயும் ஆணெறும்புகளுக்கு ஒருவிதமாயும் இருக்கின்றது.

இதுவரையில் மேற்புறத்தின் அமைப்பை ஒருவாறு விசாரித்தோமே, இனிச் சற்று உட்புறத்தின் சொரூபத்தை விசாரிப்போம். எறும்புகள் மேலலகுகளினுலாயினும் கீழலகுகளினுலாயினும் மென்று ஒருபோதும் இரைதின்பதில்லை; உண்பதற்கு முக்கியமாய் உபயோகப்படுவது நாக்குதான். நாய்கள் நாக்கினுல் திரவமான உணவுகளை எப்படி நக்கி உட்கொள்கின்றனவோ அவ்வண்ணமே எறும்புகளும் உண்ணும். பூச்சி புழுக்களைத் தின்னவேண்டுமானுல் அவற்றை அலகுகளால் கறித்து அவற்றின் ரசம் முதலிய மெல்லிய பாகங்களை நாவினுல் உட்கொள்ளும். நாக்கின் பின்கண்டநாளமும் அதையடுத்து இரைப்பையும் இருக்கின்றன; அதைத் தொடர்ந்து ரத்தநாடிகளும் இந்திரியநாடிகளும் இருக்கின்றன.

எறும்புகளின் தும்பியில் பலவிதமான அமைப்புண்டு. அவற்றின் உபயோகத்தைத் தெளிவாய்க் கண்டறிவது கடினம். ஆயினும் அவற்றுள் சில பரிசேந்திரியத்தோடும், சில நாசியென்னப்பட்ட கிராணேந்திரியத்தோடும் சம்பந்தப்பட்டிருப்பவையாகத் தோன்றுகின்றன. பெரிய பிராணிகளுக்குப் பரிசேந்திரியமும் கிராணேந்திரியமும் எவ்வளவு முக்கியமானவையோ, எறும்புகளுக்குத் தும்பி அவ்வளவு முக்கியமாயிருக்கின்றது. தும்பியில் இன்னும் வேறு இந்திரியங்களின் தன்மையும் அமைந்திருந்தாலும் அதைக் கண்டுகொள்வது அசாத்தியமாயிருக்கின்றது. தும்பி போய்விட்ட எறும்புகளுக்குச் செல்லவேண்டிய வழி தெரிவதில்லை; சத்துருமித்திரர்களைக் கண்டுகொள்ளும் திறமையில்லாமற்போகின்றது; அதிக சமீபத்திலுள்ள உணவைக் கண்டுகொள்ளவும் வல்லமையற்றுப்போகின்றது. சில எறும்புகளுக்குப் பார்வை மிகவும் சொற்பம்; வேலைசெய்யும் ஜாதியைச் சேர்ந்த எறும்புகளுக்கு வெகுவாய் நேத்திரமே கிடையாது. அப்படிப்பட்டவைகளுக்கு இந்தத் தும்பி ஒன்றில்லாவிட்டால் உடனே அவை உயிரிழக்கவேண்டுவதுதான்.

எறும்புகளின் அடிவயிற்றைப்பற்றி விசாரிக்கும்போது சில ஜாதி எறும்புகளில் பெண்ணெறும்புகளுக்கும் அலியெறும்புகளுக்கும் கொட்டுவதற்கு உரித்தான கொடுக்கு இருப்பதாகத் தெரியவருகின்றது. அந்தக் கொடுக்கிலே மிகக் கூர்மையான ஈட்டிபோன்ற இரண்டு முள்ளுகளும் மத்தியில் ஒரு விஷக்குழாயும் இருக்கின்றன. அந்த முள்ளுகள் அடியில் ஒன்ருய்க் கூடி ஒரே குழாய்

போலாகின்றன. எறும்பு அந்த முள்ளுகளால் ஓரிடத்தில் குத்திய வுடனே விஷக்குழாய் மூலமாய் அதில் விஷம் போய்ப் பாயும். கொள்ளிக்கோட்டான் என்னப்பட்ட பெரிய எறும்புகளெல்லாம் இப்படிக் கொட்டுகின்றவைகளே.

எறும்புகளுக்கு உரத்துக் கூவக் குரலில்லாமற்போனாலும் சில எறும்புகள் ஒருவிதமான சத்தமுண்டாக்குகின்றன. அடிவயிற்றின் பிரிவுகள் ஒன்றோடொன்று நெருங்கித் தேய்வதனால் அவ்வோசை உண்டாகின்றதென்கிறார்கள். எறும்புகளுக்குக் கோபமுண்டாகும் போதுதான் அவை அவ்விதமாய்ச் சத்தமுண்டாக்கும்.

இதுவரையில் பெரிதான எறும்புகளின் உருவமைப்பைப் பற்றி உள்ளும் புறமும் ஒருவாறு தெரிந்துகொண்டோமல்லவா? கடைசியாய் அவற்றின் உற்பத்தியைச் சற்று கவனிப்போம். எறும்புகளெல்லாம் முதலிலே முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கின்றன. ஆயின் ஜனங்கள் எறும்புமுட்டையென்று சொல்வது வாஸ்தவத்தில் முட்டையையல்ல; முட்டையாயிருப்பது மாறி ஒருவகைப் புழுவாகிப் புழுக்கூட்டிலிருக்கின்ற நிலையையே முட்டை என்கிறார்கள். அப்போது அந்தப் புழுக்கூடு சாதாரணமாய் முட்டையிருக்கின்ற பரிமாணத்தைப்பார்க்கிலும் பெரியதாகவேஇருக்கும். முதலில் எறும்பு முட்டையிடும்போது அம்முட்டை கொஞ்சம் நீண்டவடிவமுடையதாய் வெண்மைநிறம் அல்லது சிறிது மஞ்சள் நிறமுடையதாகித் தெளிவாயிருக்கும். அம்முட்டைகளுள் ஆண் முட்டை, பெண்முட்டை, அலிமுட்டை இவைகளுக்குச் சிறிதும் வேற்றுமைகிடையாது; எல்லாம் ஒரேதன்மையனவாயே இருக்கும். எறும்புமுட்டைகளில் மற்றொரு விசேஷம் உண்டு. அதாவது, நாளேற நாளேற அவை உருவம் பெருத்துக் கண்ணாடிபோல மிகத் தெளிவாகி ஒரு முனையில் வளைவுள்ளவையாகும். பூச்சிகளுள் எறும்புமுட்டைதவிர மற்றப் பூச்சிகளின் முட்டை இப்படி உருவம் பெருப்பதில்லை. எறும்புமுட்டைகளையெல்லாம் வேலை செய்யும் எறும்புகளே உணவுகொண்டுபோய்க் கொடுத்துப் போஷிக்கின்றனவென்கிறார்கள். அவ்வெறும்புகள் உணவை முட்டையின்மேல் உபயோகிக்க, அது கடவுளுடைய விசித்திர சக்தியால் முட்டைக்குள்ளிருக்கும் புழுவைப் போஷிக்கின்றது. முட்டையிட்டபிறகு குஞ்சுபொரிப்பதற்கு ஏறக்குறைய இரண்டுவாரம் செல்லும்.

குஞ்சுபொரித்தபிறகு சிலநாள் அவை புழுவாகவேயிருக்கும். அப்போது அந்தப் புழுக்களின் உடல் பன்னிரண்டு கட்டு அதாவது பிரிவு உள்ளவையாயிருக்கும்; ஆயின் அவை கண்ணுக்குத் தெளிவாகத் தோன்றா. இப்புழுக்களும் அந்தந்த ஜாதி எறும்புகளுக்கு ஏற்றபடி பலவிதமாயிருக்கும். சில புழுக்கள் இருபுறங்களிலும் தடித்துக் கட்டைபோலிருக்கும்; வேறு சில நுனிப்புறத்தில் குறுக

லாயிருக்கும். அப்புழுக்களின் மேல்தோல் ஏறக்குறைய மயிர்கள் அடர்ந்திருக்கின்றது. இப்படிப் புழுவாயிருக்கையிலும் அவை முற்றும் வேலையெறும்புகளுடைய ஸம்ரக்ஷணையிலேதான் இருக்கின்றன. அந்தப் புழுநிலை மாறுவது அந்தந்தக் காலத்தின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றபடிப் பலவிதமாயிருந்தாலும் ஏறக்குறைய இரண்டு மாதத்தில் அவ்வுருவம் மாறிப்போம்.

இப்படி எறும்புகள் புழுவாயிருந்து வளரும்போது அவற்றின் மேல்தோல் அடிக்கடி மாறிக்கொண்டே வருகின்றதாயினும், இத்தனைதரம் தோலுரிக்கிறதென்பதுமாத்திரம் நிர்ணயமாய்த் தெரியவில்லை. எறும்புகட்குச் சுபாவமான வடிவம் வந்து மற்றொரு எறும்பின் உதவியின்றித் தம்மைத் தாமே காத்துக்கொள்ளும்படியான காலம் வருவது ஒரேஅளவாயிராமல் ஒவ்வொரு எறும்புகளுக்கு ஒவ்வொருவிதமாய் இருப்பினும், அவற்றைத் தாம் போஷிக்கவேண்டியகாலம் இவ்வளவென்பது வேலைசெய்யும் எறும்புகளுக்கு நன்ருய்த் தெரிந்திருக்கின்றன. இவ்வண்ணமே இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பிராணிகளும் நமது பார்வைக்கு எவ்வளவு அற்பமாய்த் தோன்றினும், உற்றுப்பார்ப்பவர்களுக்கு அபரிமிதமான ஆநந்தப் பெருக்குண்டாக்கத்தக்க அற்புதமானவகையாய், எங்கும் நிறைந்து எல்லாம் வல்ல கருணைக்கடலான கடவுளின் திவ்வியசங்கற்பத்தால், ஆக்கியளிக்கப்பட்டுவருகின்றன. கல்லுக்குள் தேரையையும் முட்டைக்குள் கருவையும் ஊட்டிவளர்க்கும் உத்தமபுருஷனுக்கு உலகில் அசாத்தியமானது ஒன்றுண்டோ?

அபாயத்துக்கு இடமான ஒரு தீவு.

இத்தாலியாதேசத்துக் கதை (தொடர்ச்சி.).

மூன்ருந்தடவையும் ஜகந்நாதன் தன் தோழர்களுக்குத் தெரியாமல் சமயம் பார்த்து நழுவிப் பிலமோதியென்னும் அபாயத்துக்கிடமான தீவண்டைபோய்ச் சேர்ந்தானென்று சொன்னேமே. மறுபடியும் அவன் கப்பல் தம்முடைய தீவண்டை வந்திருப்பதைப் பார்க்க அந்தத் தீவிலுள்ளோர்க்கு அதிகமான ஆநந்தமுண்டாயிற்று. அந்தத் தடவை வந்த கப்பலைப்போல அவ்வளவு சிறந்த கப்பலை அந்தத் தீவில் மிக்க வயதுமுதிர்ந்திருப்பவர்கள்கூட ஒருபோதும் கண்டதில்லை. "இவன் வருஷந்தோறும் மிகவும் அற்புதமான பல பண்டங்கள் அமைந்த ஒரு விசித்திரமான கப்பலை ஓட்டிக்கொண்டு வருகிருன்; சென்ற வருஷத்தைப்பார்க்கிலும் இந்த வருஷத்துக் கப்பல் மிகச் சிறப்புற்றதாயிருக்கிறது; ஆதலின் இவன் யாரோ ஒரு மகாராஜனுடைய மகனேயன்றிச் சாதாரணமானவனல்லன். இவனே நமக்கு அதிபதியாகும்படி கடவுள் திருவுள்ளம்பற்றினுல் நம

மைப்போலப் பாக்கியவான்கள் உலகில் வேறில்லையென்னலாம்" என்று சொல்லி அந்நகரத்தாரெல்லாரும் அகங்களித்துக் கடவுளைத் துதித்தார்கள். அந்தத் தீவின் தலைவியும் அக்கப்பல் வந்திருப்பதைக் கண்டு அது ஜகந்நாதனுடைய கப்பலேயெனத் தெரிந்துகொண்டு இது நம்முடைய நாட்டுக்கு நல்லகாலமேயென மிகவும் மகிழ்ச்சி கொண்டு, ஜகந்நாதனை எதிர்கொண்டுபோய் அழைத்துவரும்படி தன் உத்தியோகஸ்தர்கள் அனைவரையும் அனுப்பினாள். அவனை மறு படியும் பார்த்தபோது அவளுக்கு உண்டான ஆநந்தம் இவ்வள வென்றில்லை. வெகு கோலாகலத்தோடு அனைவரும் அன்று பகற் பொழுதைப் போக்கினார்கள். அன்றையதினம் அவன் காட்டிய சாதுரியங்களையும் சமத்காரங்களையும் பார்த்தபோது முன்னமே அத்தீவார்க்கு அவனிடத்தில் உண்டாயிருந்த பிரீதி பின்னும் பத் துப்பங்கு அதிகமாயிற்று.

பொழுதுபோனபிறகு வழக்கப்படியே இளவரசி அவனைப் படுக்குமிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோய்ச் சுகமாய்ப் படுத் துச் சற்றுநேரம் இளைப்பாறவேண்டும் என்றாள். அத்தருணத்தில் அவன் பக்கத்திலிருந்த வேலைக்காரி ஒருத்தி அவனிடத்தில் அதிக நேசங்கொண்டவளாய், ஐயா இப்போது இவர்கள் கொண்டு வருகிற மதுவைத் தாங்கள் குடிப்பதுபோலப் பாவனைபண்ணிக் கொட்டிவிடுங்கள், குடிக்கவேண்டாம், குடித்தால் மோசம்வரு மென்று எவர்க்கும் தெரியாமல் ரகசியமாய் அறிவித்தாள். பின்பு யஜமானி அவனைப்பார்த்து, ஐயா தங்களுக்கு நீர்வேட்கை அதிக மாயிருக்கிறதுபோலக் காண்கிறது; இதைக் கொஞ்சம் பானம்பண் ணிப் பிறகு இளைப்பாறலாம் என்று சொன்னாள். உடனே இரண்டு பெண்கள் பொற்கிண்ணங்களில் பானவகைகள் கொண்டுவந்தார் கள். அதைப் பார்த்து ஜகந்நாதன் நகைத்துத் தன் கையில் வாங்கிக் கொண்டு தான் அதைக் குடிப்பதுபோலவே அவர்களுக்குக் காட் டித் தன் உடையில் ஊற்றிவிட்டான். அதுதெரியாமல் அண்டை யிலிருந்த சீமாட்டி அவன் அதைக் குடித்துவிட்டதாகவே நினைத்து, இந்தக் கப்பலையும் நீ இழந்துபோனாய்; இனி மற்றொரு புதுக்கப்பல் சித்தப்படுத்தவேண்டியதுதான் என்று தன் மனதிலேயே எண்ணி மகிழ்ந்துகொண்டு போய்விட்டாள்.

இந்தத் தடவை அவள் அப்படி எண்ணியது பேதைமையல்லவா? இராத்திரிமுழுதும் அவன் கட்டிலில் தலைசாய்க்கவேயில்லை. சிறி தும் கலக்கமற்று மனது மிகத் தெளிவாயிருந்ததனால் அவன் பல பரிஜனங்களை அழைப்பித்து இராத்திரிமுழுதும் பாட்டுங்கூத்து மாய்ப் பல வேடிக்கைகள் செய்விக்கத் திட்டஞ்செய்தான். அன்று இராப்பொழுதெல்லாம் அவ்வண்ணம் விநோதமாகவே கழிந்தது. காலையில் அச்செய்தியைக் கேட்டபோது இளவரசிக்குப் பின்னும் அதிகமாய்ச் சந்தோஷமுண்டாயிற்று. உதயமானவுடனே அவள்

தன் அதிகாரிகளை அழைப்பித்து, இப்போது இந்த மகாராஜனே நமக்குத் தலைவனுயினுனுதலால் ஜயபேரி அடித்து இதை எங்கும் உடனே பிரசித்தப்படுத்தவேண்டும் என்று கட்டளையிட்டாள்.

அவ்வண்ணமே அந்தச் செய்தி அந்நகரமெங்கும் பிரசுரம்செய்யப்பட்டது. சகலகுண சம்பன்னனுன ஜகந்நாதன் நமக்கு அதிபதியாயினுன்என்று எல்லோரும் மிகக் களிப்பும் பெருமையுமடைந்தார்கள். பின்பு வெகு அழகாய்ச் சிங்காரித்த பட்டத்துக் குதிரைமேல் அவனை ஏற்றுவித்துச் செங்கோலைக் கையில்கொடுத்து ரதகஜதுரகபதாதிமுதலிய பல பரிஜனங்கள் சூழ ஊர்வலம்வந்து அவனுக்குப் பட்டஞ்சூட்டிஞர்கள். பிறகு நாநாதேசத்து அரசர்களையும் அழைப்பித்து அதிக சிறப்புடனே அவ்விருவர்க்கும் கலியாணம் நடத்தப்பட்டது. அக்கலியாணத்தில் நடந்த விபவங்களை வர்ணித்துப் பேச எவராலும் முடியாது. கலியாணமானபிறகு ஜகந்நாதன் அத்தேசத்து அரசாட்சியைத் தானே வகித்துக்கொண்டு, உயர்ந்தோர் தாழ்ந்தோர், பேதை பாக்கியவான் என்கிற வேற்றுமை சிறிதும் வைக்காமல் ராஜநீதிக்கேற்கச் செங்கோல் செலுத்திவந்தான். அதனுல் அந்த நாடெல்லாம் மிகச் செழிப்படைய, நாட்டுக்குடிகளும் மிகக் களிப்புற்று வாழ்ந்திருந்தார்கள். இந்தச் சந்தோஷசாகரத்தில் மூழ்கிப்போகவே, பதினுயிரம் பூவராகனுக்காகக் கொடிய யூதன்கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் குணசீலனுடைய நினைவு அவனுக்குச் சிறிதும் உண்டாகவேயில்லை.

மகாராஜனுன ஜகந்நாதன் எவ்வளவு நற்குண நற்செய்கை உடையவனுயினும் அவனிடத்தில் இது ஒரு பெரிய துர்க்குணமென்றே சொல்லவேண்டும். ஆயின் இக்கதையின் போக்குக்கு இதுவும் ஒரு அழகுதான். ஏனெனில்,இதனேடு இன்னும் ஒரு சிறந்த சாமான் கப்பல் தனக்கு வரப்போகிறதென்று ஆவல்கொண்டு அத்தீவின் பெண்ணரசி அதற்கேற்ற சூதுகளெல்லாம் செய்யப்பார்த்தாள்; அது சற்றும் பயன்படாமல், மறுநிமிஷத்தில் அவன் தனக்குக் கணவனுக வாய்த்தானேயென்று அவள் பின்னும் அதிகமாக மகிழ்ச்சியடையும்படியாயிற்று. அதுபோலவே மூன்றுமாதத்திற்குமுன்னே தன் தந்தை மடியில் வீழ்ந்து புலம்பின இச்சிறுவன் இப்போது அத்தந்தையை முற்றும் மறந்து ஒரு யூதனுடைய கத்திக்கு இரையாகும்படி விட்டுவிட்டான். இது வாலிபத்தின் மயக்கத்தால் வந்த தீமையேயொழிய வேறல்ல.

இப்படியிருக்க ஒருநாள் ஜகந்நாதனும் அவனுடைய மனையாட்டியும் உப்பரிகைமேல் உட்கார்ந்து பலகணிவாயிலின் வழியாய்த் தெருப்புறத்து விநோதங்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில், தெருவிலே பலஜனங்கள் கூட்டமாய்க் கூடிக் கைகளில் தீவட்டிகளேற்றி எடுத்துக்கொண்டு கோயிலுக்காகப் போய்க்கொண்டிருந்தார்கள். அதுகண்டு ஜகந்நாதன், இப்போது என்னவிசேஷம்;

இந்தஜனங்கள் எங்கே போகிறார்கள் என்று தன் மனையாளைக் கேட்க, அவள், இவர்களெல்லாம் சிற்பவேலைக்காரர்கள்; இது ஸெண்டு ஜான் பண்டிகையாதலால் அவருடைய கோயிலுக்குப் பிரார்த்தனைகள் செலுத்தப்போகிறார்கள் என்றாள். ஸெண்டு ஜான் என்ற பேரைக் கேட்டவுடனே அவனுக்குத் தன் தகப்பனுடைய நினைவு வந்துவிட்டது. ஐயோ அவன் இப்போது என்னசெய்வான்! தக்ஷணமே அவன் உட்காந்திருந்ததைவிட்டுப் பேய்பிடித்தவன்போல எழுந்து பெருமூச்சுவிட்டு ஒன்றுந்தோன்றாமல் இப்புறமும் அப்புறமும் பார்த்து வெருளவெருள விழித்தான். உடனே அவனுடைய முகக்களை மாறிப்போயிற்று. அதுகண்டு அண்டையிலிருந்த இளவரசி, என்னவிசேஷம்? ஏன் இப்படிப் பிரமித்து எழுந்தாயென்று கேட்க, அவன் அப்போதும் உண்மை உரையாமல் ஒன்றும் விசேஷமில்லை என்றான். ஆயினும் அவள் அவன் படுகிற சங்கடத்தைப் பார்க்கப்பொறாமல் பலதரம் நிர்ப்பந்தித்துக் கேட்டபிறகு அவன் எல்லாச்செய்திகளையும் இப்படியென்று வெளியிட்டான். அதைக் கேட்கவே அவளுக்கு அவனைப்பார்க்கிலும் அதிகமான வியாகுலம் உண்டாயிற்று. உடனே அவள் அதிக வேகமாய் ஓடத்தக்க ஒரு குதிரையைச் சித்தப்படுத்தி லக்ஷம் பூவராகன் அவன் கையிற்கொடுத்து, திரும்பிவரும்போது எளியனான குணசீலனையும் அவசியம் கூடவே கூட்டிக்கொண்டு வரவேண்டும் என்று சொல்லி அவனைச் சுதேசத்துக்கு அனுப்பினாள்.

இது இப்படியிருக்கையில், கடன்கொடுத்த யூதன் வெனிஸ் வர்த்தகனைப் பிடித்து, சொன்னபடி அவன் பணம் கொடுக்கத் தவறிப்போனதனால், கடன்பத்திரத்தில் கண்டபடி பத்துப்பலம் மாமிசம் உடம்பினின்றும் அறுத்து எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தினான். அதைக் கண்டு அந்த வர்த்தகன், ஐயா அப்படியே அறுத்து எடுத்துக்கொள்ள ஒரு தடையுமில்லை, இன்னும் இரண்டொருநாள்மாத்திரம் மனம் பெரிதுபண்ணிப் பொறுத்திருக்கவேண்டுகிறேன்; ஒருவேளை மகன் வந்துசேர்ந்தால் அவன் முகத்தைப் பார்த்துவிட்டு உடனே உம்மிடம் வந்துவிடுகிறேனென்று சொல்லி வெகுவாய் வேண்டிகொள்ள, யூதன், அப்படியே நீர் கேட்டுக்கொள்கிறபடி ஆகட்டும், ஆயின் ஒன்று; மகன் ஒருவேளை விசேஷமாய்ப் பொருள்கொண்டுவந்தாலும் எனக்குப் பணம்வேண்டுவதில்லை; கடன்சீட்டில் கண்டபடி நீர் எனக்கு மாமிசமே கொடுக்கவேண்டும்; அப்படியானால் நான் அதுவரையில் பொறுத்திருப்பேன் என்று சொல்லி அவனைச் சிறைசெய்துவிட்டான்.

குணசீலன் இவ்விதமான அபாயநிலையில் நிற்கின்ற தருணத்திலே ஜகந்நாதன் அளவற்ற பொருளை மூட்டைகட்டிக்கொண்டு வெகு வேகமாய் அவ்விடம்வந்து சேர்ந்தான். ஆயினும் கடன் வாங்கின பணத்தைப்போலப் பத்தத்தனை கொடுத்தாலும் தனக்குப்

பொருள் தேவையில்லையென யூதன் மூர்க்கமாய்ப் பிடிவாதம் பிடிக்கவே அவ்விஷயத்தை நியாயஸ்தலத்தில் விசாரிக்கும்படி நேரிட்டது. விசாரணைக்காக ஒரு தினமும் நியமிக்கலாயிற்று. ஜகந்நாதனுக்கு மனைவியாகவாய்த்த சீமாட்டிக்கும் இவ்விடத்து நியாயாதிபதிக்கும் அதிக நேசமாகையால், அச்சீமாட்டி இந்த வியவகாரம் எப்படியாகுமோவென உள்ளத்தில் அச்சம்கொண்டு, இச்செய்தியை அந்த நியாயவாதிக்கு அறிவித்து, அவர்க்குப் பதிலாகத் தானே போய் அந்த வியவகாரத்தை விசாரித்துத் தீர்க்கிறதென்று அவரிடத்தில் திருமுகமொன்று பெற்றுக்கொண்டு விசாரணை நடக்கப்போகிற தருணத்தில் நியாயாதிபதிபோலவே வேஷம்தரித்து நியாயசபைக்கு வந்து சேர்ந்து, தான் கொண்டுவந்த கடிதத்தை அரசன்கையிற் கொடுக்க, அதன்படியே விசாரணைநடத்தும்படி அரசனும் அங்கீகரித்தான். அவள் இன்னுளென அங்கு எவர்க்கும் தெரியாது.

வாதிப் பிரதிவாதிகள் முன்னமே அவ்விடம்வந்து காத்திருந்தார்கள். ஜகந்நாதனும் வேண்டியபணத்தைக் கொண்டு சித்தமாய் வந்திருந்தான். உடனே விசாரணை ஆரம்பமாயிற்று. விசாரணையில் அச்சீமாட்டி வெளிப்படுத்திய யுத்தி புத்தி சமத்காரங்களைப் பார்த்து அரசனும் ஆச்சரியமடைந்தான். ஒரு நிமிஷத்தில் வாதிபக்கத்திலேயே நியாயம் அதிகமிருப்பதாய் அபிப்பிராயப்படுவதாகத் தோன்றும்; மறுநிமிஷத்தில் வாதி மனமழியவும் பிரதிவாதி மனமகிழவுமாகும். இப்படியே இருவர்க்கும் ஆசைகாட்டிக்கொண்டு அந்தச் சபையாரெல்லாரும் அதிசயப்படும்படி விசாரணைசெய்துவந்தாள். கடைசியில் கடன்சீட்டில் கண்டபடி பத்துப்பலம் மாமிசம் அறுத்து எடுத்துக்கொள்ள யூதனுக்கு அனுமதிகொடுத்தாள். உடனே அவன் கத்தியைத் தீட்டிக்கொண்டு அறுக்கவந்தான். அத்தருணத்தில் கல்வியிற்றேர்ந்த கட்டழகி அவனைப்பார்த்து, அவசரப்படவேண்டாம், கடன்பத்திரத்தில் குறித்தபடி பத்துப்பலம் மாமிசத்திற்கே உமக்கு உரிமையுண்டு, அதற்கு எள்ளளவும் எஞ்சவும் கூடாது; மிஞ்சவும் கூடாது. முக்கியமாய் ஒன்றைக் கவனிக்கவேண்டும்: ரத்தம் ஒரு துளியாவது வெளிப்படப்போகிறது! ரத்தத்துக்கும் உமக்கும் எவ்விதமான பாத்தியதையும் இல்லை; மேலும் அவர் உயிர்க்கு எவ்விதத்திலும் அபாயமுமுண்டாகாதபடி வல்லவரான ஒரு வைத்தியனை அண்டையில் அழைத்து வைத்துக்கொள்ளவேண்டும் என்றுள். இவன் ஒரு உயர்ந்த வர்த்தகனை வதைத்தவனென்ற பெருமை தனக்கு வரவேண்டுமென்று ஒரு வீணாசைகொண்டு அதற்காகவே அதுவரையில் ஆக்கிரகமுற்றிருந்த யூதன் அந்தப் பேச்சைக் கேட்டவுடனே இடிவிழுந்தாற்போல் நடுநடுங்கி, பிரபுக்களே, இரத்தம்சிந்தாமல் எவ்வாறு மாமிசம் அறுக்கக்கூடும்? அப்படி ஆயின் பணத்தையே கொடுத்துவிடுங்கள் என்றுன். அந்த வார்த்தை அவன் வாயினின்றும் வெளிவருவதற்குமுன்னமே பணங்கொடுக்கக்

காத்திருந்தவனைக் கூடாதென்று தடுத்து நியாயாதிபதி, உமக்குச் சீட்டுப்படி மாமிசம் கிடைக்குமேயொழிய பணம்கிடைக்காதென்ருள். ரத்தம்சிந்தாமல் எப்படி மாமிசம் அறுத்தெடுக்கிறதென்று யூதன் அதிக பரிதாபமாகப் பலதரம் வேண்டிக்கேட்க, இப்படி நீ ஒரு ஜீவனுக்குச் சதிநினைத்தாயாதலால் அதற்கு அபராதமாய் உன் ஆஸ்தியெல்லாம் பாதி துரைத்தனத்தாரையும் மற்ருெருபாதி உன் எதிரியையும் சேர்ந்துபோகவேண்டும் என்று தீர்மானஞ் செய்தாள். இப்படியாக அந்த யூதன் அதிக ஆசை அதிக நஷ்டம் என்றபடி கடைசியில் வாய்த்தவிடும்போய் அடுப்புநெருப்பும் அவிந்து அல்லாடினுன்.

முன் ஜகந்நாதன் தன் மனையாட்டியைவிட்டுப் பிரிந்தபோது அவள் அவன்கையில் பத்திரமாய் வைத்திருக்கும்படி ஒரு கணையாழி கொடுத்தனுப்பியதாகவும், இப்போது நியாயாதிபதியாகிய அவள் செய்த மகோபகாரத்திற்குப் பிரதியாய் ஏதாவது ஒரு சம்மானம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று ஜகந்நாதன் வேண்டியதற்கு அவள், அவன் கையிலிருந்த கணையாழியைப் பார்த்து, வீடுவந்த பிறகு அவனை வியக்கச்செய்யவேண்டுமென்று, எனக்கு இந்தக் கணையாழியைக் கொடுத்தால் போதும் என்று கேட்டதாகவும், அது தன் மனைவியின் நன்கொடையாயினும் அம்மகோபகாரியின் விருப்பத்தை மாற்றலாகாது என்று அவ்வண்ணமே அவன் கொடுத்துவிட்டதாகவும், பிறகு அச்சீமாட்டி அவர்கட்குமுன்னமே தன் நகரம்போய்ச் சேர்ந்திருந்து, ஜகந்நாதன் குணசீலனையும் அழைத்துக் கொண்டுவந்தபோது, ஏதோ தற்செயலாய்க் கேட்பதுபோலக் கணையாழி எங்கேயென்று கணவனைக் கேட்டதற்கு, அவன் சொன்ன செய்திகளைத் தான் நம்பாதவள்போலச் சற்றுநேரம் அவனுடன் விநோதமாக வாக்குவாதம்செய்து கடைசியில் அவள் கணையாழியைக் காட்டி உண்மையை வெளிப்படுத்தி அவர்களை வியக்கச் செய்ததாகவும் சொல்லுகின்றனர்.

ஜலத்தினுல் உண்டாகும் சௌக்கியத்தைப்பற்றிய உபந்நியாஸம்

(தொடர்ச்சி.)

சுகாதாரவிஷயங்களைக் கண்டறிவதில் மிகத் தேர்ந்தவரென்று நாங்கள் கொண்டிருக்கும் டாக்டர் பார்க்ஸ் என்பவர் தண்ணீரைப்பற்றிய தம்முடைய அபிப்பிராயத்தை அடியில்வருமாறு தீர்மானித்துரைத்திருக்கிருர்.

1. அசுத்தமான காற்று, அசுத்தமான தண்ணீர், கெட்ட உணவு இவைகளே அநேகமாய் விஷபேதி உண்டாவதற்குக் காரண

மாகும். அது திடீரென்று பலபேர்க்குக் காணுமாயின், அப்போது அது பின் இரண்டு காரணங்களுள் ஒன்றினாலேயே வெகுவாய்க் கண்டதாகக் கொள்ளவேண்டும். அப்படியே பின்னும் பல குடும்பங்களில் பரவுமாயின் அது தண்ணீரினாலேயே வருவதாம். தண்ணீர் அசுத்தப்படுவதற்கு உரிய காரணங்கள் நிலையற்றவையாகையால் அவற்றைப் பரீக்ஷித்து நிதர்சனப்படுத்துவது அசாத்தியமாம்.

2. சீதபேதியும் விஷபேதியும் விடாமல் பிரஜைகளைப் பீடித்துக்கொண்டிருந்தாலும், வருஷத்தில் ஒவ்வொருகாலத்திலே கொள்ளைநோயாகக் காண்பதானாலும், மற்றக்காரணங்களினாலல்லாமல் கெட்டதண்ணீரினாலேயே அவை வெகுவாய் உற்பத்தியாகின்றன.

3. திடீரென்று ஒரு தேசத்தில் எங்கும் அஸ்தியைப்பற்றிய சுரமாயினும் வாந்திபேதியாயினும் அதிகமாய்க் காண்பது தண்ணீரின் மூலமாய் விஷமேறுவதனாலேதான் எனத் துணிவாய்ச் சொல்லலாம்.

4. நச்சுச்சுரங்களுக்கும் இக்காரணமே ஏற்கும். அந்த சுரம் மிகக் கொடியதாயிருக்குமாயின், அதற்குக் காரணமாகத் தண்ணீரின்மூலமாய் என்னவிஷம் ஏறியிருக்கக்கூடுமென்பதைக் கவனமாய் விசாரித்தறியவேண்டும்.

5. சில திருஷ்டாந்தங்களில், தண்ணீரின்மூலமாய்ப் பிராணிதேகங்களின் துவாரங்களிலுள்ள சில பூச்சிகளின் கருக்கள் தொடர்ந்திருக்கத் தெளிவாய்க் கண்டறியப்பட்டிருக்கின்றது; மற்ற இடங்களிலும் வெகுவாய் அப்படியேதான் இருக்கவேண்டும்.

6. தண்ணீரிலுள்ள அழுக்குகள் ஒவ்வொன்றும் இன்னின்ன வியாதிக்கு இவ்வளவு ஏதுவாகின்றதென்றும், அழுக்கில்லாத தண்ணீர் ஜனசவுக்கியத்திற்கு இவ்வளவு அனுகூலமாகிறதென்றும் உறுதியாய்ச் சொல்ல இப்போது அசாத்தியமேயாயினும், நிர்மலமான தண்ணீரை ஏராளமாய் உபயோகப்படுத்துவதனால் ஜனங்களுக்கு எப்போதும் தேகசவுக்கியம் மேன்மேலும் விருத்தியாகிக்கொண்டு வருவது நிச்சயமெனத் தோன்றுகிறது. மேலும் நிர்மலமான நல்ல தண்ணீரே சுகாதாரத்துக்கு முதற்காரணமென நாங்கள் கண்டு தீர்மானித்திருக்கிறோம். டாக்டர் மாக்மரா என்பவர் வாந்திபேதியைப்பற்றி எழுதிய சிறந்த புஸ்தகத்தில் இன்னும் உறுதியாய் இதை நிரூபித்திருக்கிறார். அதாவது: நம்க்குள் யாருக்காவது வாந்திபேதி காணுமானால் அப்போது நம்மை நாம் காத்துக்கொள்ளவேண்டிய சிறந்த உபாயம் இதுதான். பட்டணங்களிலாயினும், பட்டாளங்கள் இறங்கியிருக்கும் இடங்களிலாயினும் ஜனங்கள், வீடுகளிலே மாத்திரமல்ல, வேலைசெய்யும் இடங்களிலும் எப்போதும், முக்கியமாய் அண்டை அயல்களில் வியாதி கண்டிருக்கும்போது, புதிதாய் நன்றாக வடிகட்டிய நல்லதண்ணீர்தவிர மற்றொன்றையும் குடிக்கக்கூடாது என்ற விதியை நாம் நிலைநாட்டக்கூடுமாயின், அதற்குரிய மற்ற உபாயங்கள் அனைத்தையும் நாம் தள்ளிவிடலாம் என்றார்.

கனவான்களே, இப்போது நான் சொன்னதைக் கேட்டபிறகு இவ்விஷயத்தில் உங்களுக்கும் கொஞ்சம் அபிமானமுண்டாகலா மெனத் தோன்றுகிறது. இந்த வைத்தியம் வெகு சுலபமானது; மேலும் இது உங்களுடைய சுவாதீனத்திலேயே இருக்கின்றது. இவ்விஷயத்தில் துரைத்தனத்தார் செய்யக்கூடியதாவது, நகரவிசாரணைச் சபையார், சுகாதார விசாரணைத்தலைவர்கள், வைத்திய சாலை உத்தியோகஸ்தர் முதலியோர்களை ஏற்படுத்தி, சுகாதாரவிஷயங்களைப் பரிபாலித்து அதற்குவேண்டிய யுக்தி ஆலோசனைகள் மாத்திரமே விசேஷமாய்ச் சொல்லக்கூடும்; ஜனங்களுடைய சரியான உதவியில்லாமல், நன்றாய் ஆழ்ந்தறிந்து ஏற்படுத்திய அதற்குரிய நிபந்தனைகளை வழக்கத்திற்கொண்டுவர முடியாது. முன் நாம் சொன்ன தடாகவிஷயத்தில் ஏட்டிலெழுதிய உத்தரவு சிறிதும் உபயோகப்படாமற்போனதைக் கண்டீர்களல்லவா? ஆதலால் சுகாதாரவிஷயங்களைப் பிரஜைகள்தாமே வழக்கத்தில் கொண்டுவரவேண்டும். ஜலத்தைப் பரிபாலிக்கவேண்டிய இவ்விஷயம் மிகவும் முக்கியமானதேயாயினும், கஷ்டசாத்தியமானதல்ல. இதைப் பற்றி நாம் அறிந்துகொள்ளக்கூடாத மறைபொருள் ஒன்றுமில்லை; பிரஜைகளுக்குப் பொருட்செலவும் விசேஷமாயில்லை. கொலம்பஸ் முட்டையை நிற்கவைத்த தந்திரம் உங்களுக்குத் தெரியுமல்லவா? அவ்வளவு சுலபமான ஒரு தந்திரமே இதற்கும் வேண்டும். இது அநேகவருஷங்களுக்குமுன்னமே உங்களுக்கே நன்றாய்த் தெளிவாகத் தெரிந்தவிஷயமே. ஆயினும் மிகுந்த துரதிர்ஷ்டத்தால் அவ்விஷயம் முற்றும் உபேக்ஷிக்கப்பட்டிருக்கின்றது. பானத்துக்கென்றே சில குளம் கிணறுகளைத் தனியே ஏற்படுத்தி, அவற்றிலல்லாமல் வேறுகுளங்களிலே ஸ்நாநம்பண்ணுவது, துணிதோய்ப்பது, ஆடுமாடு கழுவுவது முதலியவை செய்யவேண்டுவதென்று எங்கும் ஏற்பாடுசெய்து அதை நடவடிக்கையில் கொண்டுவருவது மிகவும் சுலபமேயொழியக் கடினமன்று. இப்படிச் செய்வதனால் உண்டாகும் நன்மையை நாம் இச்சென்னையிலேயே காணலாம். சிலவருஷங்களுக்குமுன்னே இத்தென்னிந்தியாவில் வாந்திபேதி கண்டபோது இச்சென்னை அந்நோய்க்கு மிகவும் சவுக்கியமான வாஸஸ்தானமாய் இருந்தது. ஆயிரமாயிரமாய் ஜனங்கள் அதற்கு இரையானார்கள். இப்போது மறுபடி அந்த வியாதி இவ்விடத்தில் தொடர்ந்தாலும், முன்போல இதை அவ்வளவு ஏற்ற வசதியாகக் கொள்ளாமல் வேறிடங்களுக்குப் போய்விட்டது. பின்பு அந்த வியாதி இவ்விடத்தில் பலதடவை கண்டது வாஸ்தவமேயாயினும் இங்கு ஒருபோதும் நிலையாய்த் தங்கவில்லை. இதற்கு ஏற்றகாரணமாக நான் கொண்டிருப்பது என்னவெனில், இவ்விடத்துப் பிரஜைகளெல்லாம் முன்போல இப்போது சாதாரணமான குளத்துத் தண்ணீரைக் குடியாமல் குழாய்வழியாய் வரும் புழலேரித் தண்ணீ

ளையே குடித்துவருவதுதான். அந்தக் குழாய்த்தண்ணீர் எடுக்கும் இடங்களிலும் அநேகர் ஸ்நாநம்பண்ணுகிறார்களாயினும், ஸ்நாநம் பண்ணின அழுக்குத்தண்ணீர் மறுபடி குழாய்க்குள்ளிருக்கும் நல்லதண்ணீரோடு கலக்காதபடி அதன் கட்டடம் அத்தனை உறுதி யாயிருப்பதால், மிகுந்ததண்ணீர் அழுக்கடைவதில்லை.

இச்சென்னையில் இப்போது வாந்திபேதி பாவுவதைப்பற்றி நான் எழுதிய அட்டவணையைப் பார்த்தால் இவ்விஷயம் உங்களுக்கு நன்றாய்த் தெரியவரும். குழாயின் வழியாய்ப் புழலேரித் தண் ணீர் ஓடுமிடங்களெல்லாம் வாந்திபேதியின் உபாதி மிகவும் சொற் பமாயிருக்கின்றது. அத்தண்ணீர் பாயாதவிடங்களிலோ அது மிகக் கொடுமைசெய்திருக்கின்றது. இந்தக் குழாய்த்தண்ணீரை அசுத்தப்படுத்த ஜனங்களுக்கு ஸாத்தியப்படவில்லை; ஸாத்தியப் பட்டால் அவர்கள் இதையும் அசுத்தப்படுத்திவிடுவார்கள். இப் படி இந்தக் குழாய்நீரை இவ்விடத்தில் எல்லோரும் சாதாரண மாய் உபயோகிக்கத் துவக்கியதனால், இத்தேசத்திலும் இனிமேல் சுகாதாரவிஷயங்கள் வரவர விருத்தியாகுமென நான் உறுதியாக நம்புகிறேன். "இத்தேசத்து ஜனங்களை உயர்ந்த ஸ்திதிக்கு வரும்படி முயல்வதில் சிறிதும் பயனில்லை; அவர்களுடைய ஒழுக்கங்களும் ஆசாரங்களும் ஒருமாதிரியானவையாகையால், நாம் என்ன முயன் றாலும் அவற்றை மாற்றுவிக்க நம்மால் முடியாது" என்று ஒரு காலத்தில் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்; அதெல்லாம் வீண் அபவாதமேயொழிய வேறல்ல. இங்கிலாந்திலும் சுகாதாரவி ஷயங்களைப்பற்றி முதலில் இதேவிதமாகவே விரோதங்கள் உண் டாயின; பலவிஷயங்களில் இன்னும் அவ்விரோதங்கள் இருக் கின்றன. லந்தன் முதலான பெரிய பட்டணங்களில் சில நாளைக்குமுன்வரையில் ஜலாதாரங்கள் மிகவும் நிந்திக்கத்தக்க வையாகவே இருந்தன; இப்போதும் ஒன்றும் கொண்டாடத்தக் கதாயிருக்கவில்லை. வாஸ்தவத்தில் லந்தன்நகரத்திலே பலவிடங்க ளில் இன்னும் கேடுகெட்டதாய் இருக்கின்றது. நம்முடைய ராஜதா னியிலோ ஜனங்களுடைய அபிப்பிராயம் எவ்வளவு உறுதியானதா யிருந்தும், தம்முடைய நகரத்தார்க்குப் பானத்துக்கு நல்லதண்ணீர் தேடிக்கொடுக்க ஸர்வஸ்வாதந்திரியமும் பெற்றிருக்கும் ஜலபரி பாலன சபையாருடைய முயற்சியை மேற்கொள்ள அதனால் முடி யவில்லை. ஆயின், முதலில் புழலேரியிலிருந்து தண்ணீர் கொண் டுவரவேண்டிய விஷயத்தைப்பற்றிப் பேசித் தெளியும்போது, "இது வீண்வியாபாரந்தான்; அந்தத் தண்ணீரை இவர்கள் உபயோகிக்க மாட்டார்கள்" என்று சொல்லிக்கொண்டிருந்தது எனக்கும் நன்றாய் நினைவிருக்கின்றது. அக்காலத்துக் கவர்னரான லார்ட்டு நேப்பியர் துரையும் இவ்விஷயத்தில் மிகவும் திகில்கொண்டிருந்தார். இத்தே சத்து ஜனங்களுடைய நன்மையைப்பற்றிய பலவிஷயங்களிலும்

இருந்ததுபோலவே இந்தத் தண்ணீர் கொண்டுவருகிற விஷயத்தி லும் அவர்க்கு அதிகமான அபிமானம் உண்டாயிருந்தது. அவர் கல்கத்தாவிலிருந்து சீமைக்குப் போகும்போது இந்தத் தண்ணீர்க் குழாயை ஸ்தாபிப்பதற்காகத் தாமே நேராய் இங்கு வந்திருந்தாரல்லவா? அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தபிறகு அவர், "இந்நக ரத்தார்க்கு நாம் இப்போது நல்லதண்ணீரைக் கொடுத்தோமென் பது மெய்தான்; அதை அவர்கள் உபயோகித்துக்கொள்வார்களா? உபயோகித்துக்கொள்வார்களென்றே நான் நம்புகிறேனாயினும், பலவிதமாக நான் கேள்விப்படுகிற சங்கதிகளால் ஒருவேளை உப யோகிக்கமாட்டார்களோவென்று பயப்படுகிறேன்" என்று சொன் னார். அந்தப் பயமெல்லாம் இப்போது பறந்தோடிப்போயின. இச்சென்னையில் இப்போது ஜனங்கள் விசேஷமாக சஞ்சரிக்கின்ற பிரசித்தமானவிடங்களிலுள்ள குழாய்த்தண்ணீர்த் துறைகளுள் ஒன்றைப்போய்ப் பார்த்தால், நானாஜாதி ஜனங்களும் எவ்வளவு சந்தோஷமாய்க் கொண்டாடி அந்தத் தண்ணீரை உபயோகித்துக் கொள்ளுகிறார்கள் என்பது நன்றாய்த் தெரியவரும். இப்போது கட்டியிருக்கிற குழாய்த்தண்ணீரெடுக்கும் கட்டடங்களைப்போல இன்னும் அத்தனை கட்டடங்கள் அதிகமாய்க் கட்டப்பட்டிருந்தா லும் இவர்களுக்குச் சந்தோஷமே. நான் முன் சொல்லியதுபோல வே, இவ்விடத்துக்கு இந்த நல்லதண்ணீர் வந்து சேர்ந்ததனாலும், அதைப் பிரஜைகள் எவ்விதத்திலும் அசுத்தப்படுத்தக்கூடாமலிருப் பதனாலுமே சென்றதடவை வந்த கொள்ளைநோய்க்கு இச்சென்னை நகர் தப்பியதென்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன். வாந்திபேதி காண்பதற்கு அழுக்கும் அசுத்தமுமாத்திரமே காரணமென்றால், இந்தத்தடவையிலும் இச்சென்னை அதிகமாய்த் தொந்தரைப்பட்டி ருக்கவேண்டுமல்லவா?

குண்டூர் இதற்கு மற்றொரு சிறந்த திருஷ்டாந்தமாயிருக்கின் றது. பலவருஷங்களுக்குமுன்னே அது வாந்திபேதிக்கு மத்தி யஸ்தானமாய் இருந்தது. இந்த வியாதி வருஷத்தில் ஏறக்குறைய எப்போதும் அவ்விடத்தில் நிலைகொண்டேயிருந்தது. அவ்வி டத்துச் சுகாதார விசாரணைத்தலைவருடைய 1879-வருஷத்திய வரு ஷாந்தர அறிக்கைப் பத்திரிகையில், ரெவெரெண்டு மேஸ்தர் யூனங் ஸ்டு துரை அப்பட்டணத்தில் நடந்த சங்கதியைப்பற்றிக் குறிப்பித்த விஷயத்தைப் படித்துப்பார்ப்பீர்களானால் இது உங்களுக்கு ஒரு ஆச் சரியமாய்த் தோன்றும். அப்படியிருக்க, டாக்டர் பிக்விதர் துரை அப்பட்டணத்துக்கு வந்து அவ்விடத்து நகரசுத்தி விசாரணைச் சபைக்கு உதவி அக்கிராசனாதிபதியாக நியமிக்கப்பட்டு அந்நகரத் தை நன்றாய்ச் சுத்திசெய்விக்க முயன்றார்; ஆயின் அந்நகரத்தார் அவர்மேல் கெட்ட அபிப்பிராயம்கொண்டு அதிகமாய் அவரைப் பகைத்தார்கள். ஆயினும் அவர் அவற்றைப்பார்த்து அஞ்சிநிற்கா

மல் விடாமுயற்சியாய் வீதிகள் வீடுகள் சந்துகள் சாக்கடைகள் முதலியவற்றைச் சுத்திசெய்யவும், கல்முள்ளில்லாமல் பாதைகளைச் செப்பனிடவும் முக்கியமாய் நிபந்தனைகள் ஏற்படுத்தியதுமன்றியில், தண்ணீர்வரவை விசாரிக்கும்விஷயத்தில் மிகவும் கண்ணும் கருத்துமாயிருந்தார். அவர் வந்தபோது அவ்விடம் இருந்த இருப்பைப் பற்றி அவர் சொல்லியிருப்பதாவது:—"ஏரி குளம் கிணறுகளில் தண்ணீரைப் பரிசுத்தமாய் வைத்திருக்கவேண்டுவதைப்பற்றி எவரும் சிறிதும் கருத்துவைக்கவில்லை. 1870-ஞ டிசம்பர்மீ நான் இங்கு வந்தபோது இவ்விடத்து ஜனங்கள் நீர்த்தாக்குகளையெல்லாம், அவற்றுள் முக்கியமாய்க் குளங்களை, அசுத்தப்படுத்திக்கொண்டிருந்ததைப் பார்க்க எனக்கு வெகு அச்சமுண்டாயிற்று. அக்குளங்களில் ஜனங்கள் காலையில் பல்தேய்த்து வாயைக் கொப்பளித்து அழுக்குத்தண்ணீரையெல்லாம் மறுபடியும் அக்குளத்துத் தண்ணீரிலேயே உமிழ்வதும், அழுக்குத்துணிகளைத் தோய்ப்பதும், தம் அழுக்கு உடம்புகளைத் தேய்த்து ஸ்நாநம்பண்ணுவதும், இன்னும் இத்தன்மையான கெட்டகாரியங்களைச் செய்வதுமாயிருந்தார்கள். மழைக்காலங்களில் குளக்கரைகளிலும் கோடைகாலத்தில் குளத்தினுட்புறத்திலுங்கூடப் பலஜாதிஜனங்களும் மலபாதைபண்ணிவந்தார்கள். அறியாதவர்கள் மாத்திரமேயல்ல; நன்றாய்த் தெரிந்தவர்களுங்கூடத் தாங்கள் குடிக்கும் தண்ணீர் தங்கியிருக்கும் இடத்தைக் கெடுத்துவந்தார்கள். அப்பட்டணத்துக் கிணறுகளுக்கு வெகுவாய்க் கைப்பிடிச்சுவரே கிடையாது. அப்படிப்பட்ட கிணற்றங்கரைகளில் பல புருஷர்களும் முக்கியமாய் ஸ்திரீகளும் துணிதோய்த்து ஸ்நாநம்பண்ணுவார்கள். அந்த அழுக்குத்தண்ணீரெல்லாம் மறுபடி அக்கிணற்றுக்குள்ளேயே போய் விழும். வாந்திபேதி கண்டிருக்கும்போது அந்த பேதியினால் கறைப்பட்ட துணிகளையும் அங்கேயே கழுவுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிப் பலவிதமாய் அழுக்கான தண்ணீரைப் பலபேர் குடித்திருப்பார்கள். இப்பொழுதோ நகரவிசாரணைச் சபையார் அதற்கென்று சிலபேரை நியமித்து, ஏரி குளங்களை ஜனங்கள் வந்து மேற்சொன்னவண்ணம் பலவிதமாய் அசுத்தப்படுத்தாதபடிக் காவல் வைத்துப் பாதுகாத்துவருகின்றனர்."

ஸர்ஜன் பிக்விதர் இவ்வளவு நன்றாய்த் துவக்கிய விஷயத்தை அவர்க்குப் பின்வந்த டாக்டர் தைரல் துரை நன்றாய் ஊர்ச்சிதப் படுத்தியதுமன்றியில் மேன்மேலும் அதைப் பிரபலப்படுத்தினர். இந்தநன்முயற்சிகளால் உண்டான நன்மை என்னவென்கிறீர்களோ? இந்த ராஜதானியில் வாந்திபேதி காணும்போதெல்லாம் இதுவரையில் அதற்குச் சவுக்கியமான வாஸஸ்தானமாயிருந்த குண்டூர் இப்போது பத்துவருஷகாலமாய் வாந்திபேதியைவிட்டு முற்றும் விலகியிருக்கின்றது. இப்படியிருக்க அநேகர் இந்த வியாதியெல்லாம் தெய்

வமென்று எண்ணியிருக்கிறார்களே; அது வாஸ்தவமேயாயின் தம்முடைய உரிமையை அழிக்கின்ற வைத்தியர்களின்மேல் அத்தெய்வம் நெடுநாளைக்குமுன்னமே ஏறிக்கொண்டிருக்குமல்லவா? அப்படியின்றி அத்தெய்வம் இந்த வைத்தியர்களால் துரத்தியோட்டப்படுகிறதென்றால் அது எவ்வளவு அற்பதெய்வமாயிருக்கவேண்டும்? இந்த வைத்தியர்களால் துரத்தியோட்டப்படுவது அதற்குச் சம்மதமே என்பீர்களானால் அப்போது நாம் அந்த வைத்தியர்களுடைய பக்கத்திலேயே சேருவது மேலல்லவா? அதாவது பரிசுத்தி என்னப்பட்ட தேவதையையே நாம் கொண்டாடுவோம். நம்முடைய வீடு முற்றம் சாக்கடை சந்து முதலியவைகளைச் செம்மையாய்ச் சுத்தப்படுத்தி வைத்துக்கொண்டிருப்போம். இவற்றோடுகூட முக்கியமாய் நீர்த்தாக்குகளை அழுக்காகாமலும் அசுத்தப்படுத்தாமலும் கருத்தாய்க் காத்துவருவோம். இவ்விதமாக விவேகத்துக்கும் யுக்தி ஆலோசனைகளுக்கும் தோன்றிய நற்காரியங்களையெல்லாம் தைரியமாய்ச் செய்துகொண்டு பிறகு நம் எதிரியான நோய்வந்து நமக்கு என்னதீங்கு செய்கிறதோ என்று பொறுமையாய்ப் பார்த்திருப்போம். மனிதர்கள் செய்யத்துவக்கும் எல்லாக்காரியங்களும் கைகூடிவருவதில்லையென்பது வாஸ்தவமேயாயினும், அதை நினைத்து எவரும் முயலாதிருப்பது தகுதியன்று. "முயற்சி திருவினையாக்கும்" என்பதை நினைத்துக் கூடியவரையில் முயலவேண்டும்; பின்பு விதிப்படியாகின்றது. "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்."

சிறுவர்க்கான கதை

பொன்மலை.

முன் ஒருகாலத்தில் அண்ணன் தம்பிகள் இரண்டுபேர் இருந்தார்கள். அவர்களுள் மூத்தவன் மிகுந்த தனவான்; இளையவன் மிகவும் தரித்திரன். ஆயினும் மூத்தவன் இளையவனுக்குச் சிறிதும் பொருளுதவிசெய்வதில்லை, அதனால் இளையவன் ஏதோ கூலிவேலை செய்து கஷ்டஜீவனம் செய்துவந்தான். ஒவ்வொரு காலங்களில் கூழுக்கும் வழியில்லாமல் அவன் குழந்தைகள் பசியால் வருந்தித் தவிப்பதுமுண்டு. இப்படியிருக்க ஒரு சமயத்தில் அவன் நடுக்காட்டிலே கைவண்டி தள்ளிக்கொண்டு போம்போது, சிறிதுதூரத்துக்கப்பால் பெரிய மலையொன்று தோன்றிற்று. அம்மலையை அதுவரையில் அவன் ஒருநாளும் கண்டவனல்லவாதலால், சிறிதுநேரம் அங்கேயே நின்று அதன் அதிசயங்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்படி அவன் பார்த்துக்கொண்டு நிற்கையில், நடுக்காட்டிலிருந்து யாரோ பன்னிரண்டுபேர் அம்மலையைநோக்கி வந்தார்கள்.

இவன் அவர்களைப் பார்த்துத் திருடர்களென்றெண்ணிப் பயந்து தன் வண்டியை அண்டையிலிருந்த ஒரு புதர்மறைவில் இழுத்துத் தள்ளி ஒளித்துவிட்டு, என்னநடக்கிறதோ பார்ப்போம் என்று ஒரு பெரிய விருக்ஷத்தின்மேல் ஏறிக்கொண்டான். காட்டிலிருந்துவந்த பன்னிரண்டுபேரும் அம்மலையடிவாரத்திற்போய் நின்று மலையை வணங்கி, ஓ பொன்மலையே, பொன்மலையே, வழிவிடவேண்டும் என்றார்கள். உடனே மலை இரண்டாகவெடித்து ஒரு பெரும்குகைபோலாயிற்று. அந்தக் குகைக்குள் அவர்கள் பன்னிரண்டுபேரும் புகுந்துகொண்டனர்; புகுந்ததும் அந்த வாய் தானே மூடிப்போயிற்று. சிறிது நேரத்தில் அம்மலை மறுபடியும் வாய்திறக்க, அதற்குள் சென்ற பன்னிரண்டுபேரும் தலைக்கு ஒவ்வொரு பெருமூட்டையைத் தோளிலே தூக்கிக்கொண்டு வெளியேவந்து மலையைப் பார்த்து, பொன்மலையே, பொன்மலையே, உன் வழியை மூடிக்கொள் என்றார்கள்; உடனே சிறிதும் பிளவுதோன்றாமல் அவ்வழி மூடப்பட்டது.

பின்பு அவர்கள்எங்கேயோ போய்விட்டார்கள். அவர்களெல்லாரும் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துபோனபிறகு மரத்தின் மேல் ஏறிக்கொண்டிருந்த எளியமனிதன் கீழிறங்கி, அம்மலைக்குள் என்ன அதிசயம் இருக்கின்றதோ பார்க்கவேண்டுமென்று ஆவல்கொண்டு அம்மலையடிவாரத்தண்டைபோய், முன் அவர்கள் சொன்னதுபோலவே, பொன்மலையே, பொன்மலையே, வழிவிடவேண்டும் என்றான்; உடனே அம்மலை வழிவிட்டது; அவன் உள்ளே புகுந்தான். அம்மலையின் உட்புறமெல்லாம் ஒரு பெரும்குகையாய் அதன் முன்புறத்திலே அளவற்ற பொன் வெள்ளிக்குவியல்களும் அதற்கப்பால் முத்துக்களும் ரத்தினங்களும் தானியம் கொட்டிக் கிடப்பதுபோலக் குவியல் குவியல்களாய் அளவற்றுக் கிடந்தன. அவற்றைப் பார்த்தபோது அவன் மிகவும் ஆச்சரியப்பட்டு அவற்றுள் இன்னதை எடுத்துக்கொள்ளுகிறதென்று தோன்றாமல் சிறிது நேரம் பிரமித்துநின்றான். கடைசியாய் நவரத்தினங்களைத் தேவையில்லையென்று தள்ளிவிட்டுப் பொன் வெள்ளிகள்மாத்திரம் வேண்டுமளவு வாரியெடுத்துக்கொண்டு வெளியேவந்து, பொன்மலையே, பொன்மலையே, வழியை மூடிக்கொள் என்றான்; உடனே அம்மலை வாய்திறந்த வடுத்தெரியாமல் நன்றாக மூடிக்கொண்டது.

பிறகு அவன் தன் கைவண்டியைத் தள்ளிக்கொண்டு வீடு போய்ச்சேர்ந்தான். இப்போது அவனுக்கு முன்னிருந்த கஷ்டங்களெல்லாம் வெகுவாய் நீங்கிப்போயின. தான் கைபிற்கொண்டு போன பொன் வெள்ளிகளை மாற்றி உண்டியுடை முதலியவற்றிற்குத் தேவையான பொருள்களையெல்லாம் வாங்கிச் சிலகாலம் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தான். அக்காலத்தில் அவன் தம்முடைய நன்மையைமாத்திரமே தேடினவனன்று; பல தானதருமங்கள் செய்து பிறருக்கும் விசேஷமாக நன்மைசெய்துவந்தான். இப்படியிருக்கச்

சிலநாளையில் கையிலிருந்த திரவியமெல்லாம் செலவாய்ப்போகவே அவன் அண்ணனிடத்தில் ஒரு மரக்கால் இரவல் வாங்கிக்கொண்டுபோய் அது நிரம்பப் பொன்மலையினின்றும் பொன் வெள்ளிகள் வாரிக்கொண்டுவந்தான். இந்தத் தடவையும் அவன் ரத்தினங்களைத் தொடவில்லை. அந்தப் பொருளும் முன்போலவே செலவழிந்துபோனபின்பு மறுபடியும் அவன் அண்ணனண்டைபோய் மரக்கால் சற்றுநேரம் இரவல்கேட்டான். மிகவும் எளியனாயிருந்த இவனுக்கு இத்தனை துரிதத்தில் மிகச் சிறந்த ஒரு மாளிகையும் தோட்டம் துரவுகளும் கிடைத்து வெகு செல்வமாக வாழும்படியான பாக்கியம் எப்படி வந்தது? இவனுக்கு இவ்வளவு பொருளுதவிசெய்தது யார்? மேலும் அடிக்கடி நம்முடைய மரக்காலை வாங்கிக்கொண்டுபோய் என்னவேலை செய்கிறானென்று முன்னமே தம்பியினிடத்தில் சந்தேகமும் பொறாமையும் கொண்டிருந்த தமையன், இந்தத் தடவை அவன் வந்து மரக்கால் இரவல் கேட்டபோது ஒரு யுத்திசெய்து, அம்மரக்காலின் அடிப்புறத்திலே கொஞ்சம் கிலெண்ணெய் தடவிக்கொடுத்தான். மறுபடி தம்பி அதைத் தமையனிடத்தில் திருப்பிக் கொடுத்தபோது அம்மரக்காலின் அடிப்புறத்திலே பொன்நாணயமொன்று ஒட்டிக்கொண்டிருந்தது. அதுகண்டு அவன் தம்பியினிடம் வந்து, நீ என் மரக்காலைக்கொண்டு என்னவேலைசெய்தாய் என்று கேட்க, அவன் முன்போலவே, நான் தானியந்தான் அளந்துகொண்டுவந்தேனென்று சொன்னதற்கு, தமையன் அம்மரக்காலிலிருந்த பொன்நாணயத்தை அவனுக்குக் காட்டி, நீ உண்மை உரையாமற்போனால் இதைப்பற்றி நான் உன்மேல் பிரியாதுசெய்வேனென்று சொல்லி வெருட்டினான். வெருட்டவே மிகப் பயந்து அவ்வெளியவன் வாஸ்தவத்தை வெளியிட்டான். அதைக் கேட்டவுடனே பொன்மலைப் பொருள்களனைத்தையும் வாரிக்கொண்டுவந்து தான் கோடீசுவரனாகிவிடலாமெனப் பேராசைகொண்டு அந்தக்ஷணமே மிகப் பெரிய வண்டியொன்றை ஓட்டிக்கொண்டு அவன் அம்மலையின் அடிவாரம்போய்ச் சேர்ந்தான்.

அவ்வடிவாரத்தில் வண்டியை விட்டிறங்கித் தம்பி சொல்லிக்கொடுத்தபடியே மலையை வழிவிடும்படி வேண்ட உடனே அது வழிவிட்டது. அவன் உள்ளே நுழைகையில் அவ்விடத்தில் கண்ணுக்கெட்டின தூரம் எந்தப் புறம் பார்த்தாலும் பொருள்கள் போர் போராய்க் குவிந்துகிடந்தன. அவற்றைப் பார்த்தபோது இன்னது செய்கிறதென்று தோன்றாமல் நெடுநேரம் அப்படியே மயங்கி மரம்போல நின்றுகொண்டிருந்தான். கடைசியில் விலையுயர்ந்தவையாதலால் ரத்தினங்களையே எடுத்துக்கொண்டு போகிறதென்று நிச்சயித்துத் தான் எடுக்கத்தக்கவளவு உயர்ந்த ரத்தினங்களை வாரியெடுத்துக்கொண்டு வெளியேபோகத் திரும்பினான். ஆயினும் அவனுடைய மனமெல்லாம் அங்கு கிடந்த அளவற்ற ஐசுவரியங்களைக் கண்ட

ஆநந்தத்தில் அமிழ்ந்துகிடந்ததனுல், அம்மலை வாய்திறந்து வெளியே போக வழிவிடும்படி அதை வேண்டுகிற மந்திரம் மறந்துபோயிற்று. தனக்குத் தோன்றியபடி ஏதோ இரண்டொரு பேச்சுகள் பேசினுனுயினும் அதனுல் அம்மலை சலிக்கவேயில்லை. வெளிப்போக வழி ஏற்படாமற்போகவே ஒன்றுந் தோன்றுமல் அவன் மிகவும் விசனமுற்று நின்றுன்.

இப்படியிருக்க மாலைப்பொழுதாயிற்று, மலைவாய் திறந்தது; உடனே பன்னிரண்டு திருடர்கள் அதற்குள் நுழைந்தார்கள். அவர்கள் தமது குகைக்குள் இம்மனிதனைப் பார்த்து நகைத்து, ஆ! பலநாளைத்திருடன் ஒருநாளைக்கு அகப்படுவானென்னும் பழமொழி இன்றைக்கு உண்மையாயிற்று. முன்னிரண்டு தடவைகளில் நீ எங்கள் பொருள்களை வாரிக்கொண்டுபோனது எங்களுக்குத் தெரியாதென்று நினைத்திருக்கிருயோ? உன் அதிர்ஷ்டவசத்தால் அப்போது ஓடிப்போய்விட்டாய்; இப்போது என்னசெய்வாய் என்றுர்கள்.

"ஐயோ முன் உங்கள் பொருளைக் கொண்டுபோனது நானல்லவே! என் சகோதரன்வந்து வாரிக்கொண்டு போய்விட்டான் என்று சொல்லி அவன் பலவாறு முறையிட்டான். அவன் பேச்சை அவர்கள் சிறிதும் நம்பவில்லை. தன்னை உயிரோடாவது விட்டுவிடும்படிப் பலவிதமாக வேண்டிக்கொண்டான், அவர்கள் அவனிடத்தில் சிறிதும் இரங்கவில்லை. அன்றுவரை ஒன்றும் குறைவின்றிச் செல்வமாய் வாழ்ந்திருந்த அவன் பேராசைப் பேய்பிடித்து உற்றுருறவினர் ஒருவருமின்றி நடுக்காட்டிலே கொடிய கள்ளர்களுக்கு இரையாய் உயிரை இழந்துபோனுன். அதிக ஆசை அதிக நஷ்டமல்லவா?

சமாசாரம்.

பரோதா.—சென்னையில் சிறைப்பட்டிருந்த மல்லாராவ் என்னும் பரோதாமஹாராஜா நாளதுமீ காலஞ்சென்றுர். அந்த பரோதாராஜ்யத்தில் இப்போது மந்திரியாயிருக்கிற ஸ்ரீ. த. மாதவராவு அவர்கள் சீக்கிரத்தில் தம்முடைய மந்திரி உத்தியோகத்தை விட்டு விலக நிச்சயித்திருப்பதால், இத்தனைகாலம் அவர் பட்ட பிரயாசைக்கு ஒரு அறிகுறியாக இப்பொழுது பட்டமாளும் காயகவார் அவர்க்கு மூன்றுலக்ஷம் ரூபாய் வெகுமதிகொடுக்கக் கருதியிருக்கிறுராம்.

நாடுநகரங்களின் பரிபாலனதிகாரம்.—குடிகளே சுயமாய்த் தமது நாடுநகர காரியங்களைப் பார்த்துக்கொள்வதைப் பற்றிய தீர்மானங்களைக் கவர்னர்ஜனரலவர்கள் சென்னை ராஜதானி அதிகாரிகளுக்கனுப்பி, அதை வழக்கத்தில் கொண்டுவருதற்காகத் தங்கள் அபிப்பிராயம் என்னவெனக் கேட்டிருந்தார்கள். சென்னைக் கவர்ன்மெண்டாரும் போர்டாரை இவ்விஷயத்தை ஆலோசிக்கும்படி கேட்டார்கள். போர்டார் இப்போதிருக்கிறதே போதுமானதெனக் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்க, கவர்ன்மெண்டாரும் அங்ஙனமே கவர்னர்ஜனரலவர்களுக்குத் தெரிவித்தனர். இவர் இங்ஙனம் விடைபகர்தல் சரியல்லவென்றும் இவ்விஷயத்துக்குரிய ஏற்பாடுகளை வழக்கத்திற் கொண்டுவருவதைப்பற்றி ஆலோசித்து உடனே அறிக்கைசெய்யவேண்டுமென்றும் மறுமொழி அனுப்பினர். தற்காலம் உதகமண்டலத்தில் இதைப்பற்றி ஒரு கமிஷன் கூடியிருக்கிறது. இதைப்பற்றிய விவரங்களை மேல்சஞ்சிகையில் வெளியிடுவோம்.